ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2368/26 - 2024 ජනවාරි මස 27 වැනි සෙනසුරාදා - 2024.01.27
*2368/26 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) : மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உட் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப் படவேண்டிய, குறித்த சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (ix) மற்றும் (xiii) ஆவது உப பிரிவுகளின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தம்புள்ளை பிரதேச சபையின் குடிநீரினை பேணிப் பாதுகாத்தல் குறித்த துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (I) உட்பிரிவின் ஊடாக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மத்தி மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே ஆகிய என்னால் அனுமதியளிக்கப் பட்டுள்ளது என்பதினையும் இவ்வர்த்தமானி அறிவித்தல் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இத் துணை விதிகள் தம்புள்ளை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமுல்படுத்தப்படும் என்பதினையும் இத்தால் அறிவிக்கின்றேன்.*

**சட்டத்தரணி லலித் யூ. கமகே,**
மத்திய மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
மாளிகா சதுக்கம்,
கண்டி.
*2023, சனவரி 08.*

1A – PG6628 – 106 (2024/01)
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## தம்புள்ளை பிரதேச சபையின் குடிநீர் மற்றும் நீர் நிலைகளைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பான துணை விதிகள்

1. தம்புள்ளை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்டு வாழும் பொது மக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக தனியார் மற்றும் பொது குடிநீர் பயன்பாட்டுடன் கூடிய நீர் ஆதாரங்களை பேணிப் பாதுகாக்கும் பொருட்டு நீர் ஆதாரங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துதல், மேற்பார்வைச் செய்தல், அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்கும் குடிநீர் கருத்திட்டங்களுக்குரி நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல், குடிநீரினைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இவை தொடர்பான இடைநேர் விளைவான விடயங்களுக்காக இத்துணை விதிகள் இயற்றப்பட்டுள்ளன.

2. இத்துணை விதிகளை உருவாக்குவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126 (ix) மற்றும் (xiii) உட்பிரிவுடன் சேர்த்தல் வாசிக்கப்பட வேண்டிய மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் தம்புள்ளை பிரதேச சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. இத்துணை விதியானது, தம்புள்ளை பிரதேச சபையின் குடிநீர் மற்றும் நீர் நிலைகளைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.

4. தம்புள்ளை பிரதேச சபையானது அதன் அதிகார எல்லைக்குட்பட்டு வாழும் பொது மக்களின் நீர் பாவனை மற்றும் குடிநீர்ப் பாவனைக்காக பகிர்ந்தளிக்கப்படுகின்ற ஒவ்வொரு நீர் ஆதாரம் தொடர்பிலும் பின்வரும் தகவல்களைப் பராமரிக்க வேண்டும்.

I. நீர் ஆதாரத்தின் பெயர்
II. அமைவிடம்
III. கிராம அலுவலர் பிரிவு
IV. அமைவிடத்தின் புவியியற் தொகுதி இலக்கங்கள்
V. நீர் ஆதாரம் அமைந்துள்ள காணியின் உரிமை
VI. பிரவேசம்/வீதி (இயலுமானவரை) மதிப்பீட்டு வரைபடத்தில் காட்டப்பட வேண்டும்
VII. பயன்பாட்டின் தன்மை (தனியார்/பொது)

5. நீர் ஆதாரம் நிலத்தடி நீர் ஆதாரமாக இருக்கும் பட்சத்தில், எந்த ஒரு நபரும் அதிலிருந்து 15 மீற்றர் ஆரையைக் கொண்ட எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கீழ்க் குறிப்பிட்ட எவ்வித செயல்களிலும் ஈடுபடக் கூடாது.

i. விலங்குகளை உட்பிரவேசிக்க அனுமதித்தல், வளர்த்தல், மற்றும் விலங்குகள் நுழைய அனுமதிக்கும் விதத்தில் பேணுதல்.

ii. கழிவுகளை அகற்றுதல், குழி தோண்டிப் புதைத்தல், மற்றும் இடுதல்

iii. திறந்தவெளியில் தீ மூட்டுதல் அல்லது நீர் ஆதாரத்தை சேதப்படுத்தும் வகையிலான யாதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

iv. அகழ்வுகளை மேற்கொள்ளல்.

v. யாதேனும் வடிகால்கள் வழியாக கழிவு நீரினை அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அல்லது கட்டப்பட்ட வடிகால்களை பழுதடைந்த நிலையில் பராமரிக்க அனுமதித்தல்.

vi. யாதேனும் தூரத்திலிருந்து நீர் ஆதாரத்திற்கு மேற்தரை நீரானது ஒரே திசையில் அடித்து வருவதற்கு இடமளித்தல்.

vii. நீர் ஆதாரம் ஓர் ஆழமற்ற கிணறாக இருக்கும் பட்சத்தில், கிணற்றின் அடிப்பகுதியில் இருந்து 4.5 மீற்றருக்கு குறைவான ஆழத்திலிருந்து மேற்தரை நீரானது. கிணற்றுக்குள் கசியும் வண்ணம் பராமரித்தல்.

viii. நீர் ஆதாரம் ஓர் ஆழமற்ற கிணறாக இருக்கும் பட்சத்தில், தரை மட்டத்திலிருந்து 3 மீற்றருக்கு குறைவான ஆழத்தில் நீரானது, கிணற்றுக்குள் கசியும் வண்ணம் பராமரித்தல்.

ix. நீர் ஆதாரம் ஓர் ஆழமற்ற கிணறாக இருப்பின், கிணற்றின் பாதுகாப்பிற்காக சீமெந்து, இரும்பு கம்பியிலான கான்கிரீட் மற்றும் கிணற்றினை பாதுகாப்பிற்காக ஏதேனும் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், அவற்றுக்காகப் பயன்படுத்தும் சீமெந்து அல்லது துருப்பிடித்த இரும்புக் கம்பிகளின் தூசி துகள்கள் நீருடன் கசியும் வண்ணம் பராமரித்தல்.

x. நீர் ஆதாரம் ஓர் ஆழமற்ற கிணறாக இருக்கும் பட்சத்தில், பிரதேச சபைத் தலைவர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அது தொடர்பான அதிகாரம் பெற்ற நபரினால் குறித்துரைக்கப்படுகின்ற காலவரையறைக்குள் கிணற்று நீரினை முற்றாக அகற்றி சுத்திகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறுதல்.

6 நீர் ஆதாரமானது இயற்கையாக மேற்தரையினில் அமைந்திருக்கும் பட்சத்தில், எந்தவொரு நபரும் அதன் மத்தியிலிருந்து இருபுறம் மற்றும் மேல் நோக்கி 30 மீற்றரும் மற்றும் கீழ்நோக்கி 10 மீற்றரும் கொண்ட எல்லைக்குள் கீழ்க்குறிப்பிட்ட எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது.

i. விலங்குகளை உட்பிரவேசிக்க அனுமதித்தல், வளர்த்தல், மற்றும் விலங்குகள் நுழைய அனுமதிக்கும் விதத்தில் பேணுதல்.

ii. வாகனங்கள் அல்லது இயந்திரங்களைக் கழுவுதல்

iii. குளிப்பதற்காகப் பயன்படுத்துதல்.

iv. கழிவுகளை அகற்றுதல், குழித்தோண்டி புதைத்தல், மற்றும் இடுதல்.

v. திறந்தவெளியில் தீ மூட்டுதல் அல்லது நீர் ஆதாரத்தை சேதப்படுத்தும் வகையிலான யாதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

vi. அகழ்வுகளை மேற்கொள்ளல்.

vii. யாதேனும் வடிகால்கள் வழியாக கழிவு நீரினை அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

viii. வனப் பயிர்ச் செய்கை தவிர்ந்த வேறு பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ix. ஆதாரத்திலிருந்து நீரினை வெளியேற்றல் நடவடிக்கைகளுக்காக யாதேனும் ஓர் நபரினால் மழிவுகள் கலக்கக்கூடிய வகையில் வாளி அல்லது ஏதேனும் கருவியினைப் பயன்படுத்துதல்.

7. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்க் கருத்திட்டம் மற்றும் வீட்டு உபயோகத்திற்காக நீர் ஆதாரத்தினைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த, ஆதாரத்தினைப் பயன்படுத்தி குடிநீர் கருத்திட்டத்தை நடாத்தும் ஒவ்வொரு நபரும் அல்லது நிறுவனமும் இத் துணை விதிகளின் கீழ் இரண்டாவது அட்டவணையின் பிரகாரம் உத்தரவுப்பத்திரத்தினை பிர பிரதேச சபையின் தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. இத்துணை விதிகளின் பிரகாரம் உத்தரவுப் பத்திரத்தினை கோரும் ஒவ்வொரு நபரும் துணை விதிகளில் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பப்படிவம் ஒன்றின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

9. இத்துணை விநிகளின் பிரகாரம் உத்தரவுப் பத்திரத்தினை கோரும் ஒவ்வொரு நபரும், இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திச் செய்யாத பட்சத்தில் தலைவரினால் உத்தரவுப் பத்திரமானது வழங்கப்படலாகாது.

10.1. நீர்க் குழாய் அமைப்பினை மாத்திரம் பயன்படுத்தி நுகர்வுக்காக நீரினை விநியோகிக்கும் சந்தர்ப்பங்களில்,

i. விநியோகிக்கப்படும் நீரானது இலங்கைத் தர நிர்ணய நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தர நிர்ணயத்திற்கு உட்பட்டது என்பதினை உறுதிப்படுத்தல்.

ii. விண்ணப்பதாரர் ஓர் சமுதாய அடிப்படையிலான அமைப்பாக இருக்கும் பட்சத்தில் பிரதேச சபை அல்லது சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

iii. நீர் வடிகால் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் அனைத்து கூறுகளையும் உள்ளடக்கிய திட்டமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

iv. நீர் வடிகால் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் கூறுகள் மற்றும் கட்டுமானங்கள் தொடர்பில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அளவுகோல்களிற்கு இணங்க இருத்தல் வேண்டும்.

v. நீர் வடிகால் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் பிரதான குழாய் அமைப்பானது, ஒரு தனியார் சொத்து அல்லது அதிகார சபைக்கு உரித்தான சொத்தொன்றில் அமைக்கப்படுமிடத்து அவ் சொத்தின் உரிமையாளர் அல்லது அதிகாரம் பெற்ற நபரினால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

vi. குடிநீர் கருத்திட்டத்தின் கீழ் பணிக்கு அமர்த்தப்படவிருக்கும் பணியாளர்கள் தொடர்பில் விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்ட தகவல்கள் மற்றும் பணியாளர்கள் மாற்றமடையும் சந்தர்ப்பங்களில் அதற்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

10.2. பவுசர், தண்ணீர் கொள்கலன்கள் அல்லது வேறு ஏதேனும் கருவிகளைப் பயன்படுத்தி வணிக நோக்கங்களுக்காக நீர் சேகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் சந்தர்ப்பங்களில்,

i. விநியோகிக்கப்படும் நீரானது இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தர நிர்ணயத்திற்கு உட்பட்டது என்பதினை உறுதிப்படுத்தல்.

ii. இத்துணை விதிகளின் பிரகாரம் பராமரிக்கப்பட்டு வரும் நீர் ஆதாரத்தின் கீழ் பெறப்பட்ட நீர் என்பதினை உறுதிப்படுத்தப்படும் வகையில் ஆவணமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

iii. பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் நீர் ஆதாரம் மற்றும் விநியோகிக்கப்படும் நீரானது, 1964 ஆம் ஆண்டின் இலக்கம் 24 னை வகிக்கும் நீர்வளச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் தேவைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பாக குறிப்பிட்ட சபையிடமிருந் பெறப்பட்ட சான்றிதழானது சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் நீரானது. நீர்வள சபையினால் பரிந்துரைக்கப்படுகின்ற யாதேனும் முறையில் சுத்திகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

v. நீரினை விநியோகிப்பதற்காக வாகனம் கொள்கலன் அல்லது யாதேனும் கருவி பயன்படுத்தப்படுமிடத்து தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. இவ் துணை விதிகளின் கீழ் உத்தரவுப் பத்திரம் கோரப்படும் சந்தர்ப்பத்தின் போது விண்ணப்பம் பெறப்பட்டு ஒரு மாதத்திற்குள் எதிர்பார்க்கப்படுகின்ற உத்தரவுப் பத்திரத்தினை வழங்குதல் அல்லது அவ்வாறு வழங்க முடியாத பட்சத்தில் அதற்கான காரணத்தை விண்ணப்பதாரருக்கு எழுத்து வடிவில் அறிவிப்பது தலைவரின் பணியாகும்.

12. இவ் துணை விதிகளின் கீழ் அடிப்படை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய தம்புள்ளை பிரதேச சபையினால் கட்டணமானது தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதன் பின்பு செல்லுபடியாகும்.

13. இவ் துணை விதிகளின் கீழ் உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்றுக் கொண்ட சகலரும் கீழ்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கமைய செயற்பட வேண்டும்.

i. விநியோகிக்கப்படும் நீரானது, இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தர நிர்ணயத்திற்கு உட்பட்டது என்பதினை உறுதிப்படுத்தல்.

ii. நீர் வடிகால் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் சுறுகள் மற்றும் கட்டுமானங்கள் தொடர்பில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் சபையின் அளவுகோல்களிற்கு இணங்க இருத்தல் வேண்டும்.

iii. உத்தரவுப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் போது உறுதிப்படுத்தப்பட்ட நீர் ஆதாரத்திலிருந்து பெறப்படும் நீரானது, உத்தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு மாத்திம் பயன்படுத்தப்படும் என்பதினை உறுதிப்படுத்தும் வண்ணம் செயற்பட வேண்டும்.

iv. நீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் கொள்கலன்கள் மற்றும் யாதேனும் கருவிகள் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

v. பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் நீர் ஆதாரம் மற்றும் விநியோகிக்கப்படும் நீரானது. 1964 ஆம் ஆண்டின் இலக்கம் 24 னை வகிக்கும் நீர்வளச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் பராமரிக்கப்படல் வேண்டும்.

vi. பணிக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு பணியாளரும் தோல் நோய் அல்லது தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நபராகவோ அல்லது அத்தகைய நபருடன் தொடர்பு கொண்டவராகவோ இருத்தல் கூடாது.

vii. வேலை செய்யும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பணியாளர்கள் சுகாதார பாதுகாப்பு மற்றும் சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும் என்பதோடு பரிந்துரைக்கப்பட்டதற்கமைய கையுறைகளை அணிதல் வேண்டும்.

viii. அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நோய் தடுப்பு மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் உத்தரவுகளைச் செயற்படுத்தும் சந்தர்ப்பங்களில், அக்கட்டளைகளின் கீழ் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப சேவைகள் நடாத்தப்படல் வேண்டும்.

ix. குடிநீர் கருத்திட்டம் தொடர்பாக பணிக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு பணியாளரும் உத்தரவுப் பத்திரம் விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட்ட தகவலில் குறிப்பிடப்பட்ட அதே பெயரினைக் கொண்ட நபராக இருத்தல் வேண்டும். அல்லது அதன் பிறகு ஏதேனும் சந்தர்ப்பங்களின் போது சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் நபர், பிரதேச சபைத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களில் பெயர் குறிப்பிடப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

x. குடிநீர் கருத்திட்டத்தின் கீழ் பணிக்கு அமர்த்தப்படும் பணியாளர்கள் மாதங்களுக்கு ஒருமுறை அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி பரிந்துரைத்த கால வரையறைக்குள் பணியாளர்கள் பணிக்கு அமர்த்துவதற்கு தகுதியாளர்கள் என்பதினை சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்

14. அதிக எல்லைக்குள் தேசிய நீர்வழங்கல் சபை தவிர்ந்த இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்ட உத்தரவுப் பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நீரினை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களின் போது. அவ் உத்தரவுப் பத்திரத்தினை பெற்றவர் தவிர்ந்த யாதேனும் நபரினால் அந் நீர் ஆதாரத்தினை பயன்படுத்துதல் அல்லது முறையற்ற நீர் இணைப்பினை பராமரித்தல் என்பனவற்றை செய்யாதிருத்தல் வேண்டும்

15. பிரதேச சபைத் தலைவர் அல்லது பிரதேச சபைத் தலைவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட யாரேனும் பிரதேச சபையின் அதிகாரி ஒருவரினால் யாதேனும் நீர் ஆதாரமானது, இத் துணை விதிகளுக்கு உரித்தான மற்றும் இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் கீழ் பராமரிக்கப்படுகின்றனவா என பரிசீலனை செய்வதற்காக தக்க சமயத்தில் நீர் ஆதாரம் அமைந்துள்ள வளாகத்திற்கு உட்பிரவேசித்தல், நீர் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல், துணை விதிகளின் பணிகளுக்கு அவசியமென கருதும் தகவல்களை கேட்டறிதல், குடிநீரினை விநியோகிக்கும் ஏதேனும் சந்தர்ப்பங்களின் போது, நீர் தொடர்பாக அல்லது அதற்கு பயன்படுத்தப்படும் கொள்கலன்கள் மற்றும் கருவிகளை பரிசீலனை செய்தல் மற்றும் அவை தொடர்பான ஏதேனும் தகவல்களை கோருதல் என்பன சட்டரீதியானதாகும்.

16. இத்துணை விதிகளின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவு பந்திரமானது தலைவரினால் விசேடித்த ஏதேனும் காரணங்களுக்காக இரத்து செய்யப்படாவிடத்து, வழங்கப்பட்ட ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும்.

17. இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு முரணாக ஏதேனும் குடிநீர் ஆதாரத்தினைப் பயன்படுத்துதல் அல்லது குடிநீரினை விநியோகித்தல் தொடர்பாக கண்டறியப்படும் சந்தரப்பங்களின் போது பிரதேச சபைத் தலைவரினால் உத்தரவுப் பத்திர உரிமையாளருக்கு இத்துணை விதிகளுக்கேற்ப இணங்கி செயற்படுவதற்கு நியாயமான கால அவகாசத்துடன் எழுத்துவடிவிலான அறவித்தலொன்றினை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் கால அவகாசமானது 14 நாட்களுக்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும்.

18. மேற்குறிப்பிட்ட பிரிவின் கீழ் வழங்கப்பட்ட காலவரையறைக்குள் யாதேனும் உத்தரவுப் பத்திர உரிமையாளர் துணை விதிகளுக்கமைய செயற்படுவதற்கு தவறும் பட்சத்தில் பிரதேச சபைத் தலைவரினால் துணை விதிகளின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்தினை இரத்து செய்து உரிமையாளருக்கு எழுத்துபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

19. இத்துணை விதிகளில் மேற்கூறிய பிரிவுகளின் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இத்துணை விதிகளின் கீழ் நபரொருவர் யாதேனும் நீர்க் கருத்திட்ட உத்தரவுப் பத்திரத்திற்காக முதன் முறையாக விண்ணப்பிக்கும் போது மற்றும் பெற்றுக் கொண்ட உத்தரவுப் பத்திரத்தில் நீர்க் கருத்திட்டத்தில் ஏதேனும் மாற்றங்களுடன் மீண்டும் விண்ணப்பிக்கும் பட்சத்தில், இத்துணை விதிகளின் அடிப்படையில் உரிய பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டாலே ஒழிய பிரதேச சபைத் தலைவரினால் அதற்குரிய உத்தரவுப் பத்திரத்தினை வழங்க முடியாது.

20. இத்துணை விதிகளின் 19 ஆவது பிரிவுகளின் செயற்பாடுகள் மற்றும் அதிகார எல்லைக்குள் செயற்படும் நீர் கருத்திட்டம் தொடர்பாக குடிநீர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முகமாக சபைக்கு பரிந்துரைகளை வழங்க கீழ் குறிப்பிட்ட நபர்களைக் கொண்ட குழுவாக இருத்தல் வேண்டும்

i. தலைவர்
ii. செயலாளர்
iii. தொழிற்நுட்ப உத்தியோகத்தர்
iv. சுற்றுச்சூழல் உத்தியோகத்தர்
v. சுகாதார மருத்துவ அதிகார அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்

எது எவ்வாராயினும் சேவையின் அவசியத்தன்மையை கருத்திற் கொண்டு குழுவின் நோக்கங்களை அடைவதற்காக தலைவரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற யாதேனும் ஓர் உத்தியோகத்தரை குழுவிற்கு உதவியாளராக அழைப்பதற்கு மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகள் தடையாக இருத்தலாகாது.

21. இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்ட உத்தரவுப் பத்திரத்தின் அடிப்படையில், உத்தரவுப் பத்திரமின்றி நீர் ஆதாரத்தினை பயன்படுத்துதல் அல்லது குடிநீர்க் கருத்திட்டத்தினை செயற்படுத்துதல் அல்லது பிரிவு 5 இற்கு முரணாக செயற்படுதல் குற்றமாவதோடு, அக்குற்றம் தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக நிரூபிக்கப்படுமிடத்து 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டந்தின் 122 ஆம் பிரிவின் கீழ் தண்டணையிற்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

22. அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இத்துணை விதிகள் அமுல்படுத்தப்படும் திகதியிலிருந்து குடிநீர்க் கருத்திட்ட உத்தரவுப் பத்திரம் தொடர்பாக இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் படி இணங்கி செயற்படுவதற்கு யாதேனும் நீர் கருத்திட்டத்தினை நடாத்துகின்ற நபர் அல்லது நிறுவனம் அல்லது அமைப்பானது குறிப்பிடத்தக்க கால அவகாசம் கேட்குமிடத்து 20 ஆவது துணை விதிகளில் குறிப்பிடப்பட்ட குழுவின் பரிந்துரைகளை கவனத்திற் கொண்டு தலைவரினால் கால அவகாரம் வழங்கப்படுவது சட்டரீதியானதாகும். எது எவ்வாராயினும் இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் கால அவகாசமானது துணை விதிகள் அமுலாகும் தினத்திலிருந்து ஓர் வருடத்திற்கு மிகையாகாமல் இருத்தல் வேண்டும்.

23. இத்துணை விதிகளிலுள்ள பதங்களில் உள்ள மாற்றுச் சொற்கள் அவசியமானால்,

பிரதேச சபை என்பது தம்புள்ளை பிரதேச சபையாகும்.

தலைவர் என்பது உள்ளூராட்சித் திணைக்களத்தின் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தம்புள்ளை பிரதேச சபையின் கீழ் நியமிக்கப்படும் தலைவர் அல்லது தலைவர் பதவியானது செயற்படாது வெற்றிடமாகும் சந்தர்ப்பங்களில் தலைவர் பதவியிற்கான கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக எழுத்து வடிவில் சட்டரீதியாக நியமிக்கப்படும் நபர் ஆவார்.

கழிவுகள் என்ற பதமானது அவ்வப்போது திருத்தப்பட்டு 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கத்தை வகிக்கின்ற சுற்றுச்சூழல் சட்டத்தின் கழிவுகள் என்ற பதத்திற்கு வழங்கப்பட்ட பொருள்கோடலயாகும்.

அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் என்பதன் பொருள். தலைவரினால் சாதாரணமாக அல்லது விசேடமாக குறிப்பிட்ட பணியிற்காக எழுத்துவடிவில் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஆவார்.

நீர் ஆதாரம் என்பது, குடிநீர் தேவையினை கருதி மேற்தரை அல்லது நிலத்தடி நீரினை பாவிப்பதற்காக இயற்கையான அல்லது செயற்கையான முறையில் நீரினை சேகரித்தல் அல்லது பொதுக் குடிநீர் பயன்பாட்டிற்கு சாத்தியமான ஓர் இடமாகும்.

**அட்டவணை இலக்கம் - 01**

**குடிநீரினைப் பெறுவதற்கு நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான உத்தரவுப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவம்**

01. விண்ணப்பதாரரின் பெயர் :

02. முகவரி :

03. விண்ணப்பதாரர் ஓர் வியாபாரமாக இயங்கினால் பதிவு எண் :
விணணப்பதாரர் ஓர் சங்கமாக இயங்கினால் பதிவு எண் :

04. நீர் ஆதாரத்தின் அமைவிடம் பற்றிய தகவல்கள்
- I. நீர் ஆதாரத்தின் பெயர்
- II. அமைவிடம் (இயலுமானவரை மதிப்பீட்டு வரைப்படத்தில் காட்டப்பட வேண்டும்)
- III. நீர் ஆதாரத்தின் தன்மை
- IV. கிராம அலுவலகர்
- V. அமைவிடத்தின் புவியியற் தொகுதி இலக்கங்கள்
- VI. நீர் ஆதாரம் அமைந்துள்ள காணியின் உரிமை
- VII. பிரவேசம்/வீதி (இயலுமானவரை மதிப்பீட்டு வரைப்படத்தில் - காட்டப்பட வேண்டும்)
- VIII. பயன்பாட்டின் தன்மை (தனியார் அல்லது பொது)

05. குடிநீர் கருத்திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் பணியாளர்கள் பற்றிய தகவல்கள் :

| தொ. இல. | பெயர் | முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

06. குடிநீர் கருத்திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் பற்றிய தகவல்கள்

| தொ. இல. | வாகன எண் | வாகன வகை |
|---|---|---|
| | | |
| | | |

மேலே குறிப்பிடப்பட்ட இலக்கங்கள் 5 மற்றும் 6 இல் உள்ள தகவல்கள் மாற்றமடையும் போது தலைவருக்கு தெரிவிக்க வேண்டும்.

07. முன்மொழியப்பட்ட நீர் கருத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட பயன்பெறுவோர்களின் எண்ணிக்கை

08. தினசரி பயன்பாட்டிற்காக எதிர்ப்பார்க்கப்படும் நீர் கொள்திறன்

பூர்த்திச் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் இணைப்புக்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

i. சங்கத்தின் பெயர், சங்கம் சார்ந்த விதிகள், மற்றும் பதிவிலக்கம் ஆகிய சான்றிதழ்களின் பிரதிகள்

ii. நீர் கருத்திட்டத்திற்குரிய கூறுகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைத் தெளிவாக காட்டும் வகையில் தொழில்நுட்ப அதிகாரியினால் சான்றளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் திட்டம்

iii. நீர் வடிகால் திட்டத்திற்குரிய சகல கூறுகளையும் உள்ளடக்கிய திட்டம்

iv. நீர் வடிகால் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் பிரதான குழாய் அமைப்பானது தனியார் சொத்து அல்லது அதிகார சபைக்கு உரித்தான சொத்தொன்றில் அமைக்கப்படுடத்து அச்சொத்தின் உரிமையாளர் அல்லது அதிகாரம் பெற்ற நபரினால் உத்தரவு வழங்கப்பட்ட ஆவணங்கள்

விண்ணப்பதாரரின் கையொப்பம்

(இவ் விண்ணப்பப்படிவத்துடன் வழிகாட்டல்கள் உள்ளடங்கிய ஆவணத்தின் பிரதியொன்று வழங்கப்படும்)

**அட்டவணை இலக்கம் 02**

பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள நீர் ஆதாரத்தினை பயன்படுத்தி குடிநீர் திட்டத்தினை நடாத்துவதற்காக வழங்கப்படுகின்ற உத்தரவுப் பத்திரமாகும்.

01. உத்தரவுப் பத்திரம் கோருபவரின் பெயர் :

02. முகவரி :

03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

04. அனுமதி வழங்கப்பட்ட நீர் ஆதாரம் :

05. அனுமதி வழங்கப்பட்ட கால எல்லை :

திகதி

..................................
தலைவர்
பிரதேச சபை

EOG 01 - 213/ 1

---

**மத்திய மாகாண மாகாண சபை**

**துணை விதிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, குறித்த சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (ix) மற்றும் (xiii) ஆவது உப பிரிவுகளின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அக்குறணை பிரதேச சபையினால் ஆக்கப்பட்ட குடிநீர் பாதுகாப்பு தொடர்பான துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட் டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது பந்தியின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மத்திய மாகாண சபையின் ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ. கமகே ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட ட தினத்திலிருந்து அக்குறணை பிரதேச சபையின் நிருவாகப் பிரிவுக்குள் செயற்படுத்தப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

சட்டத்தரணி லலித் யூ. கமகே,
மத்திய மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
மாளிகா சதுக்கம்,
கண்டி.
2023, சனவரி 05.

**அக்குறணை பிரதேச சபையின்**
**குடிநீர் மற்றும் நீர் மூலாதரப் பகுதிகளது பாதுகாப்பு தொடர்பான துணை விதிகள்**

01. அக்குறணை பிரதேச சபையின் நிருவாகப் பிரிவுக்குள் வசிக்கும் மக்களது பொது சுகாதாரத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகத் தனிப்பட்ட பாவனைக்கான குடிநீரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவற்றின் நீர் மூலாதாரப் பகுதிகளை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், நிருவாகப் பிரதேசத்தினுள் நடத்திச் செல்லப்படும் நீர்வழங்கல் திட்டங்களின் நீர் மூலாதாரங்களது பாதுகாப்புக்கு உரிய செயற்பாடுகளை மேற்கொள்வது உள்ளிட்ட குடிநீரின் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வது மற்றும் இதனுடன் இணைந்த விடயங்களை ஏற்பாடு செய்வதற்காக இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

02. இந்தத் துணை விதிகளை அமைப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, குறித்த சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (ix) மற்றும் (xiii) ஆவது உப பிரிவுகளின் கீழ் அக்குறணை பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

03. இந்தத் துணை விதிகள் அக்குறணை பிரதேச சபையின் குடிநீர் மற்றும் நீர் மூலாதாரங்களது பாதுகாப்பு தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.

04. அக்குறணை பிரதேச சபையின் மூலம் நிருவாகப் பிரதேசத்தினுள் அமைக்கப்பட்டுள்ள பொதுமக்களது பயன்பாட்டுக்கான குடிநீரை வழங்கும் ஒவ்வொரு மூலாதாரத்துக்கும் ஏற்றவாறு பின்வரும் தகவல்களைப் பேணி வருதல் வேண்டும்.

i. நீர் மூலாதாரத்தின் பெயர்
ii. அமைவிடம்
iii. கிராம அலுவலர் பிரிவு
iv. அமைவிட வகை இலக்கம்
v. நீர் மூலாதாரம் அமைந்துள்ள இடத்தின் உரித்துரிமை/ஆளுகை
vi. நுழைவு (அண்ணளவான வரைபின் மூலம் காட்டப்படல் வேண்டும்)
vii. நுகர்வின் வகை (தனியார் /பொது)

05. நீர் மூலாதாரம் நிலக்கீழான ஒன்றாக அமைந்திருப்பின் அதனைச் சுற்றியுள்ள 15 மீற்றர் ஆரையைக் கொண்டுள்ள எல்லைக்குள் எவரேனும் பின்வரும் எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்ளல் கூடாது.

(i) விலங்குகளை உட்படுத்துதல், கட்டிவைத்தல், மேயவிடுதல் அல்லது விலங்குகள் உட்செல்வதற்கு ஏதுவான வகையில் அதனை நடத்திச் செல்லல்.

(ii) ஏதேனும் கழிவுப் பொருட்களை இட்டுச் செல்லல், புதைத்தல் அல்லது குவித்து வைத்தல்

(iii) திறந்த வெளியாக உள்ள இடத்துக்குள் தீ வைத்தல் அல்லது நீர் மூலாதாரத்துக்குச் சேதம் ஏற்படும் வகையில் ஏதேனும் செயற்பாட் டை மேற்கொள்ளல்.

(iv) அகழ்வுகளை மேற்கொள்ளல்

(v) ஏதேனும் வடிகான் ஒன்றின் ஊடாக சாக்கடை நீர் உட்செல்லும் வகையில் எந்தவொரு செயற் பாட் டையும் மேற்கொள்ளல் அல்லது அமைக்கப்பட்டுள்ள வடிகானைச் சேதப்படுத்தும் வகையில் அதனை நடத்துதல்.

(vi) ஏதேனுமொரு தூரத்திலிருந்து நீர் மூலாதாரத்தின் மேற்பரப்பில் நீரை வடிந்தோடச் செய்தல்.

(vii) நீர் மூலாதாரம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருப்பின், கிணற்றிலிருந்து 4.5 மீற்றர் குறைவான தூரத்தில் மேற்றரையின் நீரைக் கிணற்றுக்குள் கசிவதற்குச் செய்தல்.

(viii) நீர் மூலாதாரம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருப்பின், தரைமட்டத்திலிருந்து 3 மீற்றருக்கும் குறைவான ஆழத்தில் கிணற்றில் நீர் கசிந்து செல்வதற்குரிய வகையில் செய்தல்.

(ix) நீர் மூலாதாரம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருப்பின், கிணற்றின் பாதுகாப்புக்கெனச் சீமெந்து மற்றும் இரும்பு சேர்த்த கொங்கிறீட் மற்றும் கிணற்று மூடியை அமைத்துள்ள வேளையில் அதற்கெனப் பயன்படுத்தப்பட்டுள்ள சீமெந்து நீரில் தோய்ந்திருப்பதற்கோ அல்லது இரும்புடன் சேர்ந்து கறை படிந்து நீருடன் கலந்துவிடும் வண்ணம் இருக்கச் செய்தல்.

(x) நீர் மூலாதாரம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருப்பின், பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் சுகாதார மருத்துவ அலுவலர் அல்லது அவரது உரிய அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் விதிக்கப்படும் கால எல்லைக்குள் கிணற்று நீரை முழுமையாக அகற்றி நன்கு சுத்தப்படுத்திப் பயன்படுத்த ஏற்பாடு செய்யாமை.

06. இயற்கையான மேற்பரப்பில் உள்ள நீர் மூலாதாரமாக இருப்பின், வாய்க்கட் டின் இரு பக்கங்களிலும் மற்றும் 30 மீற்றர் மேலும் 10 மீற்றர் கீழுமாக உள்ள எல்லைக்குள் எவரேனும் பின்வரும் எந்தச் செயற்பாட்டையேனும் மேற்கொள்ளல் கூடாது.

(i) விலங்குகளை உட்படுத்துதல், கட்டிவைத்தல், மேயவிடுதல் அல்லது விலங்குகள் உட் செல்வதறடகு ஏதுவான வகையில் அதனை நடத்திச் செல்லல்.
(ii) வாகனங்களைக் கழுவுதல், அல்லது ஏதேனும் இயந்திரங்களைக் கழுவுதல்.
(iii) நீராடுவதற்குப் பயன்படுத்துதல்.
(iv) ஏதேனும் கழிவுப் பொருட்களை இட்டு வைத்தல், புதைத்தல் அல்லது குவித்து வைத்தல்.

(v) திறந்த வெளியில் எரியூட்டுதல் அல்லது நீர் மூலாதாரத்துக்குச் சேதம் ஏற்படும் வகையில் ஏதேனும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(vi) அகழ்வுகளை மேற்கொள்ளல்.

(vii) ஏதேனும் வடிகான் ஒன்றின் ஊடாக சாக்கடை நீர் உட்செல்லும் வகையில் எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளல்.

(viii) காடு வளர்ப்பு அல்லாத எந்தவொரு பயிர்ச்செய்கையையும் மேற்கொள்ளல்.

(ix) எவரேனும் நீர் மூலாதாரத்துடன் ஏதேனும் கழிவுப்பொருட்கள் கலந்துவிடும் வகையில் நீரை வெளியில் எடுப்பதற்கென வாளி அல்லது எந்தவொரு கருவியையும் பயன்படுத்துதல்.

07. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நடத்திச் செல்லப்படும் நீர் வழங்கல் திட்டம் தொடர்பில் மற்றும் வதிவிடப் பாவனைக்கு நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்துவது தவிர்ந்த நீர் மூலாதாரத்தை நடத்திச் செல்லும் எவரேனும் ஆள் அல்லது நிறுவனம் இந்தத் துணைவிதிகளின் கீழ் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைப் பிரதேச சபையின் தவிசாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

08. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கென விண்ணப்பிக்கும் எவரேனும் இந்தத் துணை விதிகளின் முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட் ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

09. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கென விண்ணப்பிக்கும் எவரேனும் இந்தத் துணை விதிகளின் நிபந்தனைகளை நிறைவேற்றியிருந்தாலன்றி தவிசாளர் அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் கூடாது.

10. 1. நீரை விநியோகிப்பதற்கெனக் குழாய்த் தொகுதியை மட்டுமே பயன்படுத்தி நீர் வழங்கலை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில்,

(1) விநியோகிக்கப்படும் நீர் இலங்கையின் தர நிருணய மன்றத்தின் மூலம் வழங்கப்படும் தர நிருணயங்களை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) விண்ணப்பிப்போர் சனசமூக நீர் மூலாதார அமையமொன்றாயின், பிரதேச சபை அல்லது சனசமூக நீர்வழங்கல் திணைக்களத்திலோ பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) நீர் வழங்கல் திட் டத்துக்கமைய அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்ட திட்டத்தை முன்வைத்திருத்தல் வேண்டும்.

(4) நீர் வழங்கல் திட்டத்துக்கான அனைத்து நிருமாணங்களும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப் புச் சபையின் நியமங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(5) நீர் வழங்கலுக்கென ஈடுபடுத்தப்படும் பிரதம நீர்க்குழாய்த் தொகுதியைத் தனிப்பட்ட ஆதனங்கள் ஊடாகக் கொண்டு செல்ல நேரிட்டால் அதற்கான உரித்துரிமையுடனும் வேறேதும் அதிகாரசபைக்குரிய ஆதனங்கள் ஊடாக மேற்கொள்ளும் பட்சத்தில் அதற்குரிய அதிகாரசபையின் அனுமதி பெறப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) நீர்வழங்கல் திட்டத்தின் ஊடாகச் சேவையை வழங்க உத்தேசித்துள்ளதாயின் விண்ணப்பப்படிவத்தில் கேட்கப் பட்டுள்ள தகவல்கள் மற்றும் பணியாட்கள் அவற்றுக்கான அனைத்து தகவல்களையும் முன்வைத்தல் வேண்டும்.

10.2 நீர் விநியோகம் பவுசர் ஒன்றின் மூலம் அல்லது கொள்கலன் ஒன்றின் மூலம் அல்லது வேறேதும் சாதனங்கள் மூலம் மேற் கொள்ளப்படும் போது நீரைத் தேக்கிவைக்கும் வர்த்தக நோக்குடன் விநியோகம் செய்யும்போது,

(1) விநியோகம் செய்யப்படும் நீர் இலங்கை தர நிருணயத்துக்கு உட்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

(2) இந்தத் துணைவிதிகளுக்கமைய நடத்திச் செல்லப்படும் நீர் மூலாதாரம் ஒன்றின் கீழ் வழங்கப்படும் நீர் தான் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) பயன்படுத்தப் படும் நீர் மூலாதாரம் தொடர்பில் மற்றும் விநியோகிக்கப்படும் நீர் தொடர்பில் 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நீர்வளங்கள் சபையின் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள நியமங்களுக்கமைய அவற்றின் தேவைகளை நிறைவு செய்துள்ளதாகக் குறித்த சபையின் சான்றிதழ் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(4) பயன்பாட்டுக்கென வழங்கப்படும் நீர் நீர்வளங்கள் சபையின் பரிந்துரைகளின் கீழ் அது சுத்திகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(5) நீரை விநியோகிப்பதற்கென ஏதும் வாகனங்கள், கொள்கலன்கள் அல்லது வேறேதும் கருவிகள் பயன்படுத்தப்படுமெனின் அவை பற்றிய தகவல்களை முன்வைத்தல் வேண்டும்.

11. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கென விண்ணப்பிக்கும் போது அவ்வாறான விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற ஒருமாத காலத்துக்குள் உத்தேச அனுமதிப்பத்திரத்தை வழங்கிவிட இயலாமற் போயின் அதற்கான காரணத்தை விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் தெரிவிப்பது தவிசாளரது கடமையாக அமையும்.

12. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கென விண்ணப்பிக்கும் போது உள்ள கட்டணம் அடிப்படைச் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைய அக்குறணை பிரதேச சபை தீர்மானம் செய்து அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் செல்லுபடியாகும்.

13. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறும் ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையச் செயற்படுதல் வேண்டும்.

i. விநியோகம் செய்யும் நீர் இலங்கை தர நிருணய சபையின் தர நிருணயங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.
ii. நீர் வழங்கல் திட்டத்துக்கான அனைத்து நிருமாணங்களும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப் புச் சபையின் நியமங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.
iii. அனுமதிப்பத்திரத்துக்கென விண்ணப்பிக்கும் போது உறுதிப்படுத்தப்பட்ட நீர் மூலாதாரத்திலிருந்து பெறப்பட்ட நீர் அனுமதிப்பத்திரத்துக்கான கருமங்களில் ஈடுபடுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
iv. நீரை விநியோகிப்பதற்கென ஏதும் வாகனங்கள், கொள்கலன்கள் அல்லது வேறேதும் கருவிகள் பயன்படுத்தப்படுமெனின் அவை பற்றிய தகவல்களை முன்வைத்தல் வேண்டும்.
v. பயன்படுத்தப்படும் நீர் மூலாதாரம் தொடர்பில் மற்றும் விநியோகிக்கப்படும் நீர் தொடர்பில் 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நீர்வளங்கள் சபையின் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள நியமங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.
vi. ஈடுபடுத்தப்படும் ஊழியர் அனைவரும் சரும நோய்கள் மற்றும் தொற்று நோய்களுக்கு உட்பட்டவராகவோ அல்லது அந்த நோய்கள் உள்ளோருடன் தொடர்புறுபவராகவோ இருத்தல் கூடாது.
vii. சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு நேரத்திலும் சுகாதாரப் பாதுகாப்புடனான சுத்தமான ஆடைகளை அணிந்திருத்தல் வேண்டும்.
viii. நிருவாகப் பிரதேசத்தினுள் நோய்கள் தடுப்பு மற்றும் நோய்காப்புக் கட்டளைச் சட்டத்துக்கமைய அவற்றின் நிபந்தனைகளைக் கடைப்பிடித்து வருதல் வேண்டும்.
ix. நீர்வழங்கல் செயற்றிட்டத்துக்கமையச் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு ஊழியரும் விண்ணப்பம் முன்வைக்கப்படும் தருணத்தில் குறிப்பிடப்படும் தகவல்களில் பெயர் உட்படுத்தப்பட்டுள்ள அல்லது பின்னர் சேவையில் ஈடுபடுத்தப்படுமெனின் அவை பற்றிய தகவல்களைப் பிரதேச சபையின் தவிசாளரிடம் முன்வைக்கும் போது அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களாகவே இருத்தல் வேண்டும்.
x. நீர்வழங்கல் செயற்றிட்டத்துக்கமையச் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஊழியர்கள் தொடர்பில் ஒவ்வொரு 6 மாத காலத்திலும் சுகாதார மருத்துவ அலுவலர் பரிந்துரைக்கும் காலத்ததுக்கு குறித்த சேவையில் ஈடுபடுத்துதல் பொருத்தமானதென உறுதிப்படுத்தலைச் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

14. நிருவாகப் பிரதேசத்துக்குள் ஏதும் நீர் மூலாதாரம் தேசிய நீர்வழங்கல் சபையன்றி இந்தத் துணை விதிகளின் கீழ் தரப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் கீழ் பயன்பாட்டுக்கு எடுக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளவர் தவிர வேறு எவரும் குறித் நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்த அல்லது அதனை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி நீர் இணைப்பு வழங்குதல் கூடாது.

15. இந்தத் துணை விதிகளுக்கமைய எந்தவொரு நீர் மூலாதாரத்திலிருந்து இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இயைபாக நடத்திவரப்படுகின்றதா என்பதைப் பரிசோதனை செய்வதற்குப் பொருத்தமான அல்லது நியாமான நேரத்தில் தவிசாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட் ட சபையின் அலுவலரோ நீர் மூலாதாரம் அமைந்துள்ள இடத்தில் பிரவேசிப்பது, மாதிரியைப் பெறுவது அல்லது துணை விதிகளுக்கமையத் தேவையெனக் கருதும் வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்வது, குடிநீரை விநியோகம் செய்யும் எந்தவொரு நேரத்திலும் அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் அல்லது அது வழங்கப்படும் கருவிகள், கொள்கலன்கள் என்பவற்றைப் பரிசோதனை செய்வது, அதற்கெனத் தேவை எனக் கருதப்படும் தகவல்களைக் கேட்பது சட்டபூர்வமானதாக அமையும்.

16. இந்தத் துணைவிதிகளின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் தவிசாளரால் விசேடமாக இரத்துச் செய்யப்பட்டாலன்றி அது வழங்கப்பட்ட வருடத்தின் திசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவடைதல் வேண்டும்.

17. இந்தத் துணை விதிகளின் நியமங்களுக்கு எதிராக ஏதும் நீர் மூலாதாரங்களைப் பயன்படுத்தும்போது அல்லது குடிநீரை விநியோகிக்கும் போது அவை தொடர்பில் இனங்காணப்பட்ட எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிப்பத்திரதாரிக்கு அது தொடர்பான நியமங்களைக் கடைப்பிடிக்குமாறு தவிசாளர் நியாயமான அளவு காலத்தை வழங்கி எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் காலம் 14 நாட்களைத் தாண்டுதல் கூடாது.

18. மேற்குறித்த பந்திக்கமைய வழங்கப்படும் காலத்துக்குள் துணை விதிகளுக்கமைய அனுமதிப்பத்திரதாரி செயற்படவில்லையெனின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் தவிசாளரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து அது தொடர்பான எழுத்துமூல அறிவித்தலை அனுமதிப்பத்திரதாரிக்கு வழங்குதல் வேண்டும்.

19. இந்தத் துணை விதிகளின் மேற்குறித்த நியமங்களின் கீழ் எவை குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்தத் துணைவிதிகளின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களுக்கான எந்தவொரு நீர்வழங்கல் திட்டத்திற்காக முதல் தடவையாக அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் நீர்வழங்கல் திட்டத்துக்கான மாற்றங்களுடன் மீண்டும் அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் போது இந்தத் துணை விதிகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியின் பரிந்துரையுடன் அல்லது தவிசாளர் அதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் கூடாது.

20. இந்தத் துணை விதிகளின் 19 ஆவது நியமத்தின்படி உரிய விடயங்களுக்கென மற்றும் நிருவாகப் பிரதேசத்தில் செயற்படும் நீர்வழங்கல் திட்டங்கள் தொடர்பில் குடிநீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகச் சபை பரிந்துரைத்துள்ள பின்வருவோரைக் கொண்ட கமிட்டி அமைதல் வேண்டும்.

i. தவிசாளர்
ii. செயலாளர்
iii. தொழினுட்ப உத்தியோகத்தர்
iv. சுற்றாடல் உத்தியோகத்தர்
v. சுகாதார மருத்துவ அதிகாரி அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட அலுவலர்

எவ்வாறெனினும் சேவையின் தேவை நிமித்தம் கமிட்டியின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கெனக் கமிட்டியின் உதவிக்காக சபையின் தவிசாளரால் பெயரிடப்படும் ஏனைய எவரேனும் உத்தியோகத்தரை அழைப்பதற்கென மேற்குறித்த ஏற்பாடுகள் தடையாக அமைதல் கூடாது.

21. இந்த துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்துக்கு அமைவாக அனுமதிப்பத்திரம் இல்லாது நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்தும்போது அல்லது குடிநீர் திட்டத்தைச் செயற்படுத்தும்போது 5 ஆவது நியமத்தை மீறும் வகையில் செயற்படுவது குற்றமாக அமைவதுடன், அது தொடர்பில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்துக்கு உட்படுதல் வேண்டும்.

22. இந்தத் துணைவிதிகள் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து நிருவாகப் பிரதேசத்துக்குள் செயற்பட்டு வரும் இந்தத் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பக்திரத்துக்கு அமைவாகக் குடிநீர் வழங்கல் திட்டம் தொடர்பில் இந்தத் துணை விதிகளின் நிபந்தனைகளுக்கு ஏற்ப எந்தவொரு நீர்வழங்கல் திட்டத்தைச் செயற்படுத்தும் ஆள் எவரும், அமையம் எதுவும் அல்லது இயக்கம் எதுவும் குறித்த கால எல்லையை வேண்டி நின்றால் 20 ஆவது நியமத்துக்கமைவான கமிட்டியின் பரிந்துரையைக் கவனத்தில் கொண்டு தவிசாளர் சலுகைக் காலம் ஒன்றை வழங்குவது சட்டபூர்வமாக அமையும். எனினும், இந்த விதியின் கீழ் வழங்கப்படும் சலுகைக் காலம் இந்தத் துணைவிதிகள் செயற்படும் திகதியிலிருந்து எழும் முதலாவது பஞ்சாங்க வருட காலத்தைத் தாண்டாத காலமாக இருத்தல் கூடாது.

23. இந்தத் துணைவிதிகளின் பதங்கள் தொடர்பில் கருத்து மயக்கம் ஏற்பட்டாலன்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ள,

“பிரதேச சபை” என்பது அக்குறணை பிரதேச சபையையும்,

“தவிசாளர்” என்பது உள்ளூராட்சித் அமையத் தேர்தல்கள் சட்டத்திற்கமைய அக்குறணை பிரதேச சபைக்கு நியமிக்கப்படும் தவிசாளர் அல்லது தவிசாளரது பதவி செயற்படாதபோது தவிசாளரது பதவியின் கடமைகளை மேற்கொள்ளும் எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஆள் எவரையும்,

“கழிவுப்பொருட்கள்” என்பது இடைக்கிடை திருத்தம் செய்யப்பட்டுள்ள 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் கழிவுப் பொருட்கள் என்பதற்கு வழங்கப்பட்டுள்ள பொருளையும்,

“அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்” என்பது தவிசாளரால் பொதுவாகவோ அல்லது விசேடமாகவோ குறித்த கருமம் ஒன்றுக்கென எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட் டுள்ள அலுவலர் ஒருவரையும்,

“நீர் மூலாதாரம்” என்பது குடிநீர்த் தேவைக்கென மேற்றரை நீர் அல்லது தரைக்கீழ் நீர் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்காக இயற்கையாக அல்லது செயற்கையாக நீரைத் தேக்கிவைத்தல் அல்லது பொதுக் குடிநீர் பயன்பாட்டுக்கென ஏற்படுத்தப் பட்டுள்ள இடம் எனவும் கருதப்படும்.

**அட்டவணை - 01**

**அக்குறணை பிரதேச சபை**

**குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்தவற்கான விண்ணப்பப்படிவம்**

01. விண்ணப்பதாரியின் பெயர் :
02. முகவரி :
03. விண்ணப்பதாரி ஒரு தொழிலாக இதனைச் செய்து வருவதாயின் பதிவிலக்கம் / விண்ணப்பதாரி ஒரு சங்கமாக இருப்பின் குறித்த சங்கத்தின் பதிவிலக்கம் :
04. நீர் மூலாதாரத்தின் அமைவிடம் பற்றிய தகவல்கள் :
   i. நீர் மூலாதாரத்தின் பெயர் :
   ii. அமைவிடம்: (அண்ணளவான வழித்தட வரைபடத்தினால் குறிப்பிடுக)
   iii. நீர் மூலாதாரத்தின் தன்மை :
   iv. கிராம அலுவலர் பிரிவு :
   v. நிலையத்தின் அமைவிட இலக்கம் :
   vi. நீர் மூலாதார அமைவிடத்தின் உரித்துரிமை/ஆளுகை :
   vii. நுழைவு (அண்ணளவான வழித்தட வரைபடத்தினால் குறிப்பிடுக)
   viii. நுகர்வின்ன தன்மை (தனிப்பட்ட /பொது) :

05. நீர்வழங்கல் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் ஊழியர் பற்றிய தகவல்கள் :

| தொ. இல. | பெயர் | முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

06. வர்த்தகத்துக்கெனப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் பற்றிய தகவல்கள் :

| தொ. இல. | வாகன எண் | வாகன வகை |
|---|---|---|
| | | |
| | | |

மேற்குறித்த 05 மற்றும் 06 தகவல்கள் வேறுபடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தவிசாளரை அறிவூட்டம் செய்தல் வேண்டும்.

08. உத்தேச நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட பயனாளிகளது எண்ணிக்கை :
09. நாளாந்தம் பயன்படுத்த உத்தேசித்துள்ள நீரின் கொள்ளளவு :

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் இணைப்புகளை முன்வைத்தல் வேண்டும் :

i. சங்கம் ஒன்றாயின் அதன் சட் ட விதிகளின் பிரதி மற்றும் சங்கத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதி

ii. நீர்வழங்கல் திட்டத்துக்குரிய கட் டமைப்பின் வழிமுறையை விளக்கும் வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழினுட்ப அலுவலர் ஒருவரால் சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்

iii. நீர்வழங்கல் திட்டத்துக்கான அனைத்து கட்டமைப்புகளையும் உள்ளடக்கிய திட்டம்

iv. நீர்வழங்கல் திட்டத்துக்கென ஈடுபடுத்தப்பட்டுள்ள பிரதம குழாய்த் தொகுதிகள் தனியாரது ஆதனங்களிடையே கொண்டு வரப்பட்டிருப்பின் அதற்கான அதிகாரத்தை வழங்கிய அனுமதி தொடர்பான ஆவணங்கள்

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :

(இந்த விண்ணப்பப்படிவத்துடன் வழிகாட்டல் பற்றிய ஆவணத்தின் பிரதி வழங்கப்படும்)

**அட்டவணை - 02**

பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்தி நீர்வழங்கல் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக வழங்கப்படும் சான்றிதழ்

1. அனுமதிப்பத்திரதாரியின் முழுப் பெயர் :
2. முகவரி:
3. தே.அ.அட்டை இலக்கம் :
4. அனுமதி வழங்கப்பட்டுள்ள நீர் மூலாதாரம் :
5. அனுமதி வழங்கப்படும் காலம் :

தவிசாளர்
அக்குறணை பிரதேச சபை

திகதி

EOG 01 - 213/ 2

---

**மத்திய மாகாண மாகாண சபை**

**துணை விதிகள்**

255 ஆவது அதிகாரம் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் (12) (ஆ) உப பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய, குறித்த சட்டத்தின் 153 ஆவது பிரிவின் கீழ் நகர சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நாவலபிட்டிய நகர சபையின் குடிநீர் பாதுகாப்பு தொடர்பான துணை விதிகள், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154(1) ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்தி மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இந்தத் துணை விதிகள் நாவலபிட்டிய நகர சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்படுத்தப்படும் என இத்தால் அறிவிக்கன்றேன்.

**சட்டத்தரணி லலித் யூ. கமகே,**
மத்திய மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
மாளிகா சதுக்கம்,
கண்டி.
2023, சனவரி 05.

## நாவலபிட்டிய நகர சபையின்
## குடிநீர் மற்றும் நீர் மூலாதரப் பகுதிகளது பாதுகாப்பு தொடர்பான துணை விதிகள்

01. நாவலபிட்டிய நகர சபையின் நிருவாகப் பிரிவுக்குள் வசிக்கும் மக்களது பொது சுகாதாரத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகத் தனிப்பட்ட பாவனைக்கான குடிநீரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவற்றின் நீர் மூலாதாரப் பகுதிகளை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், நிருவாகப் பிரதேசத்தினுள் நடத்திச் செல்லப்படும் நீர்வழங்கல் திட்டங்களின் நீர் மூலாதாரங்களது பாதுகாப்புக்கு உரிய செயற்பாடுகளை மேற்கொள்வது உள்ளிட்ட குடிநீரின் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வது மற்றும் இதனுடன் இணைந்த விடயங்களை ஏற்பாடு செய்வதற்காக இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

02. இந்தத் துணை விதிகளை அமைப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, குறித்த சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (ix) மற்றும் (xiii) ஆவது உப பிரிவுகளின் கீழ் அக்குறணை பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

03. இந்தத் துணை விதிகள் அக்குறணை பிரதேச சபையின் குடிநீர் மற்றும் நீர் மூலாதாரங்களது பாதுகாப்பு தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.

04. நாவலபிட்டிய நகர சபையின் மூலம் நிருவாகப் பிரதேசத்தினுள் அமைக்கப்பட்டுள்ள பொதுமக்களது பயன்பாட்டுக்கான குடிநீரை வழங்கும் ஒவ்வொரு மூலாதாரத்துக்கும் ஏற்றவாறு பின்வரும் தகவல்களைப் பேணி வருதல் வேண்டும்.

i. நீர் மூலாதாரத்தின் பெயர்
ii. அமைவிடம்
iii. கிராம அலுவலர் பிரிவு
iv. அமைவிட வகை இலக்கம்
v. நீர் மூலாதாரம் அமைந்துள்ள இடத்தின் உரித்துரிமை/ஆளுகை
vi. நுழைவு (அண்ணளவான வரைபின் மூலம் காட்டப்படல் வேண்டும்)
vii. நுகர்வின் வகை (தனியார் /பொது)

05. நீர் மூலாதாரம் நிலக்கீழான ஒன்றாக அமைந்திருப்பின் அதனைச் சுற்றியுள்ள 15 மீற்றர் ஆரையைக் கொண்டுள்ள எல்லைக்குள் எவரேனும் பின்வரும் எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்ளல் கூடாது.

(i) விலங்குகளை உட்படுத்துதல், கட்டிவைத்தல், மேயவிடுதல் அல்லது விலங்குகள் உட்செல்வதற்கு ஏதுவான வகையில் அதனை நடத்திச் செல்லல்.

(ii) ஏதேனும் கழிவுப் பொருட்களை இட்டுச் செல்லல், புதைத்தல் அல்லது குவித்து வைத்தல்

(iii) திறந்த வெளியாக உள்ள இடத்துக்குள் தீ வைத்தல் அல்லது நீர் மூலாதாரத்துக்குச் சேதம் ஏற்படும் வகையில் ஏதேனும் செயற்பாட் டை மேற்கொள்ளல்.

(iv) அகழ்வுகளை மேற்கொள்ளல்

(v) ஏதேனும் வடிகான் ஒன்றின் ஊடாக சாக்கடை நீர் உட்செல்லும் வகையில் எந்தவொரு செயற்பாட் டையும் மேற்கொள்ளல் அல்லது அமைக்கப்பட்டுள்ள வடிகானைச் சேதப்படுத்தும் வகையில் அதனை நடத்துதல்.

(vi) ஏதேனுமொரு தூரத்திலிருந்து நீர் மூலாதாரத்தின் மேற்பரப்பில் நீரை வடிந்தோடச் செய்தல்.

(vii) நீர் மூலாதாரம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருப்பின், கிணற்றிலிருந்து 4.5 மீற்றர் குறைவான தூரத்தில் மேற்றரையின் நீரைக் கிணற்றுக்குள் கசிவதற்குச் செய்தல்.

(viii) நீர் மூலாதாரம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருப்பின், தரைமட்டத்திலிருந்து 3 மீற்றருக்கும் குறைவான ஆழத்தில் கிணற்றில் நீர் கசிந்து செல்வதற்குரிய வகையில் செய்தல்.

(ix) நீர் மூலாதாரம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருப்பின், கிணற்றின் பாதுகாப்புக்கெனச் சிமெந்து மற்றும் இரும்பு சேர்த்த கொங்கிறீட் மற்றும் கிணற்று மூடியை அமைத்துள்ள வேளையில் அதற்கெனப் பயன்படுத்தப்பட்டுள்ள சிமெந்து நீரில் தோய்ந்திருப்பதற்கோ அல்லது இரும்புடன் சேர்ந்து கறை படிந்து நீருடன் கலந்துவிடும் வண்ணம் இருக்கச் செய்தல்.

(x) நீர் மூலாதாரம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருப்பின், பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் சுகாதார மருத்துவ அலுவலர் அல்லது அவரது உரிய அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் விதிக்கப்படும் கால எல்லைக்குள் கிணற்று நீரை முழுமையாக அகற்றி நன்கு சுத்தப்படுத்திப் பயன்படுத்த ஏற்பாடு செய்யாமை.

06. இயற்கையான மேற்பரப்பில் உள்ள நீர் மூலாதாரமாக இருப்பின், வாய்க்கட் டின் இரு பக்கங்களிலும் மற்றும் 30 மீற்றர் மேலும் 10 மீற்றர் கீழுமாக உள்ள எல்லைக்குள் எவரேனும் பின்வரும் எந்தச் செயற்பாட்டையேனும் மேற்கொள்ளல் கூடாது.

(i) விலங்குகளை உட்படுத்துதல், கட்டிவைத்தல், மேயவிடுதல் அல்லது விலங்குகள் உட் செல்வதறடகு ஏதுவான வகையில் அதனை நடத்திச் செல்லல்.
(ii) வாகனங்களைக் கழுவுதல் அல்லது ஏதேனும் இயந்திரங்களைக் கழுவுதல்.
(iii) நீராடுவதற்குப் பயன்படுத்துதல்.
(iv) ஏதேனும் கழிவுப் பொருட்களை இட்டு வைத்தல், புதைத்தல் அல்லது குவித்து வைத்தல்.
(v) திறந்த வெளியில் எரியூட்டுதல் அல்லது நீர் மூலாதாரத்துக்குச் சேதம் ஏற்படும் வகையில் ஏதேனும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
(vi) அகழ்வுகளை மேற்கொள்ளல்.
(vii) ஏதேனும் வடிகான் ஒன்றின் ஊடாக சாக்கடை நீர் உட்செல்லும் வகையில் எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளல்.
(viii) காடு வளர்ப்பு அல்லாத எந்தவொரு பயிர்ச்செய்கையையும் மேற்கொள்ளல்.
(ix) எவரேனும் நீர் மூலாதாரத்துடன் ஏதேனும் கழிவுப்பொருட்கள் கலந்துவிடும் வகையில் நீரை வெளியில் எடுப்பதற்கென வாளி அல்லது எந்தவொரு கருவியையும் பயன்படுத்துதல்.

07. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நடத்திச் செல்லப்படும் நீர் வழங்கல் திட்டம் தொடர்பில் மற்றும் வதிவிடப் பாவனைக்கு நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்துவது தவிர்ந்த நீர் மூலாதாரத்தை நடத்திச் செல்லும் எவரேனும் அல்லது நிறுவனம் இந்தத் துணைவிதிகளின் கீழ் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைப் பிரதேச சபையின் தவிசாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

08. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கென விண்ணப்பிக்கும் எவரேனும் இந்தத் துணை விதிகளின் முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட் ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

09. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கென விண்ணப்பிக்கும் எவரேனும் இந்தத் துணை விதிகளின் நிபந்தனைகளை நிறைவேற்றியிருந்தாலன்றி தவிசாளர் அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் கூடாது.

10. 1. நீரை விநியோகிப்பதற்கெனக் குழாய்த் தொகுதியை மட்டுமே பயன்படுத்தி நீர் வழங்கலை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில்,

(1) விநியோகிக்கப்படும் நீர் இலங்கையின் தர நிருணய மன்றத்தின் மூலம் வழங்கப்படும் தர நிருணயங்களை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) விண்ணப்பிப்போர் சனசமூக நீர் மூலாதார அமையமொன்றாயின், பிரதேச சபை அல்லது சனசமூக நீர்வழங்கல் திணைக்களத்திலோ பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) நீர் வழங்கல் திட் டத்துக்கமைய அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்ட திட்டத்தை முன்வைத்திருத்தல் வேண்டும்.

(4) நீர் வழங்கல் திட்டத்துக்கான அனைத்து நிருமாணங்களும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப் புச் சபையின் நியமங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(5) நீர் வழங்கலுக்கென ஈடுபடுத்தப்படும் பிரதம நீர்க்குழாய்த் தொகுதியைத் தனிப்பட்ட ஆதனங்கள் ஊடாகக் கொண்டு செல்ல நேரிட்டால் அதற்கான உரித்துரிமையுடனும் வேறேதும் அதிகாரசபைக்குரிய ஆதனங்கள் ஊடாக மேற்கொள்ளும் பட்சத்தில் அதற்குரிய அதிகாரசபையின் அனுமதி பெறப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) நீர்வழங்கல் திட்டத்தின் ஊடாகச் சேவையை வழங்க உத்தேசித்துள்ளதாயின் விண்ணப்பப்படிவத்தில் கேட்கப் பட்டுள்ள தகவல்கள் மற்றும் பணியாட்கள் அவற்றுக்கான அனைத்து தகவல்களையும் முன்வைத்தல் வேண்டும்.

10.2 நீர் விநியோகம் பவுசர் ஒன்றின் மூலம் அல்லது கொள்கலன் ஒன்றின் மூலம் அல்லது வேறேதும் சாதனங்கள் மூலம் மேற் கொள்ளப்படும் போது நீரைத் தேக்கிவைக்கும் வர்த்தக நோக்குடன் விநியோகம் செய்யும்போது,

(1) விநியோகம் செய்யப்படும் நீர் இலங்கை தர நிருணயத்துக்கு உட்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

(2) இந்தத் துணைவிதிகளுக்கமைய நடத்திச் செல்லப்படும் நீர் மூலாதாரம் ஒன்றின் கீழ் வழங்கப்படும் நீர் தான் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) பயன்படுத்தப் படும் நீர் மூலாதாரம் தொடர்பில் மற்றும் விநியோகிக்கப்படும் நீர் தொடர்பில் 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நீர்வளங்கள் சபையின் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள நியமங்களுக்கமைய அவற்றின் தேவைகளை நிறைவு செய்துள்ளதாகக் குறித்த சபையின் சான்றிதழ் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(4) பயன்பாட்டுக்கென வழங்கப்படும் நீர் நீர்வளங்கள் சபையின் பரிந்துரைகளின் கீழ் அது சுத்திகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(5) நீரை விநியோகிப்பதற்கென ஏதும் வாகனங்கள், கொள்கலன்கள் அல்லது வேறேதும் கருவிகள் பயன்படுத்தப்படுமெனின் அவை பற்றிய தகவல்கைளை முன்வைத்தல் வேண்டும்.

11. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கென விண்ணப்பிக்கும் போது அவ்வாறான விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற ஒருமாத காலத்துக்குள் உத்தேச அனுமதிப்பத்திரத்தை வழங்கிவிட இயலாமற் போயின் அதற்கான காரணத்தை விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் தெரிவிப்பது தவிசாளரது கடமையாக அமையும்.

12. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கென விண்ணப்பிக்கும் போது உள்ள கட்டணம் அடிப்படைச் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைய அக்குறணை பிரதேச சபை தீர்மானம் செய்து அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் செல்லுபடியாகும்.

13. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறும் ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையச் செயற்படுதல் வேண்டும்.

i. விநியோகம் செய்யும் நீர் இலங்கை தர நிருணய சபையின் தர நிருணயங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.

ii. நீர் வழங்கல் திட்டத்துக்கான அனைத்து நிருமாணங்களும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப் புச் சபையின் நியமங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

iii. அனுமதிப்பத்திரத்துக்கென விண்ணப்பிக்கும் போது உறுதிப்படுத்தப்பட்ட நீர் மூலாதாரத்திலிருந்து பெறப்பட்ட நீர் அனுமதிப்பத்திரத்துக்கான கருமங்களில் ஈடுபடுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

iv. நீரை விநியோகிப்பதற்கென ஏதும் வாகனங்கள், கொள்கலன்கள் அல்லது வேறேதும் கருவிகள் பயன்படுத்தப்படுமெனின் அவை பற்றிய தகவல்களை முன்வைத்தல் வேண்டும்.

v. பயன்படுத்தப்படும் நீர் மூலாதாரம் தொடர்பில் மற்றும் விநியோகிக்கப்படும் நீர் தொடர்பில் 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நீர்வளங்கள் சபையின் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள நியமங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.

vi. ஈடுபடுத்தப்படும் ஊழியர் அனைவரும் சரும நோய்கள் மற்றும் தொற்று நோய்களுக்கு உட்பட்டவராகவோ அல்லது அந்த நோய்கள் உள்ளோருடன் தொடர்புறுபவராகவோ இருத்தல் கூடாது.

vii. சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு நேரத்திலும் சுகாதாரப் பாதுகாப்புடனான சுத்தமான ஆடைகளை அணிந்திருத்தல் வேண்டும்.

viii. நிருவாகப் பிரதேசத்தினுள் நோய்கள் தடுப்பு மற்றும் நோய்காப்புக் கட்டளைச் சட்டத்துக்கமைய அவற்றின் நிபந்தனைகளைக் கடைப்பிடித்து வருதல் வேண்டும்.

ix. நீர்வழங்கல் செயற்றிட்டத்துக்கமையச் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு ஊழியரும் விண்ணப்பம் முன்வைக்கப்படும் தருணத்தில் குறிப்பிடப்படும் தகவல்களில் பெயர் உட்படுத்தப்பட்டுள்ள அல்லது பின்னர் சேவையில் ஈடுபடுத்தப்படுமெனின் அவை பற்றிய தகவல்களைப் பிரதேச சபையின் தவிசாளரிடம் முன்வைக்கும் போது அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களாகவே இருத்தல் வேண்டும்.

x. நீர்வழங்கல் செயற்றிட்டத்துக்கமையச் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஊழியர்கள் தொடர்பில் ஒவ்வொரு 6 மாத காலத்திலும் சுகாதார மருத்துவ அலுவலர் பரிந்துரைக்கும் காலத்ததுக்கு குறித்த சேவையில் ஈடுபடுத்துதல் பொருத்தமானதென உறுதிப்படுத்தலைச் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

14. நிருவாகப் பிரதேசத்துக்குள் ஏதும் நீர் மூலாதாரம் தேசிய நீர்வழங்கல் சபையன்றி இந்தத் துணை விதிகளின் கீழ் தரப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் கீழ் பயன்பாட்டுக்கு எடுக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளவர் தவிர வேறு எவரும் குறித்த நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்த அல்லது அதனை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி நீர் இணைப்பு வழங்குதல் கூடாது.

15. இந்தத் துணை விதிகளுக்கமைய எந்தவொரு நீர் மூலாதாரத்திலிருந்து இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இயைபாக நடத்திவரப்படுகின்றதா என்பதைப் பரிசோதனை செய்வதற்குப் பொருத்தமான அல்லது நியாமான நேரத்தில் தவிசாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட சபையின் அலுவலரோ நீர் மூலாதாரம் அமைந்துள்ள

இடத்தில் பிரவேசிப்பது, மாதிரியைப் பெறுவது அல்லது துணை விதிகளுக்கமையத் தேவையெனக் கருதும் வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்வது, குடிநீரை விநியோகம் செய்யும் எந்தவொரு நேரத்திலும் அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் அல்லது அது வழங்கப்படும் கருவிகள், கொள்கலன்கள் என்பவற்றைப் பரிசோதனை செய்வது, அதற்கெனத் தேவை எனக் கருதப்படும் தகவல்களைக் கேட்பது சட்டபூர்வமானதாக அமையும்.

16. இந்தத் துணைவிதிகளின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் தவிசாளரால் விசேடமாக இரத்துச் செய்யப்பட்டாலன்றி அது வழங்கப்பட்ட வருடத்தின் திசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவடைதல் வேண்டும்.

17. இந்தத் துணை விதிகளின் நியமங்களுக்கு எதிராக ஏதும் நீர் மூலாதாரங்களைப் பயன்படுத்தும்போது அல்லது குடிநீரை விநியோகிக்கும் போது அவை தொடர்பில் இனங்காணப்பட்ட எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிப்பத்திரதாரிக்கு அது தொடர்பான நியமங்களைக் கடைப்பிடிக்குமாறு தவிசாளர் நியாயமான அளவு காலத்தை வழங்கி எழுத்துமூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் காலம் 14 நாட்களைத் தாண்டுதல் கூடாது.

18. மேற்குறித்த பந்திக்கமைய வழங்கப்படும் காலத்துக்குள் துணை விதிகளுக்கமைய அனுமதிப்பத்திரதாரி செயற்படவில்லையெனின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் தவிசாளரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து அது தொடர்பான எழுத்துமூல அறிவித்தலை அனுமதிப்பத்திரதாரிக்கு வழங்குதல் வேண்டும்.

19. இந்தத் துணை விதிகளின் மேற்குறித்த நியமங்களின் கீழ் எவை குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்தத் துணைவிதிகளின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களுக்கான எந்தவொரு நீர்வழங்கல் திட்டத்திற்காக முதல் தடவையாக அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் நீர்வழங்கல் திட்டத்துக்கான மாற்றங்களுடன் மீண்டும் அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் போது இந்தத் துணை விதிகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியின் பரிந்துரையுடன் அல்லாது தவிசாளர் அதற் கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் கூடாது.

20. இந்தத் துணை விதிகளின் 19 ஆவது நியமத்தின்படி உரிய விடயங்களுக்கென மற்றும் நிருவாகப் பிரதேசத்தில் செயற்படும் நீர்வழங்கல் திட்டங்கள் தொடர்பில் குடிநீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகச் சபை பரிந்துரைத்துள்ள பின்வருவோரைக் கொண்ட கமிட்டி அமைதல் வேண்டும்.

i. தவிசாளர்
ii. செயலாளர்
iii. தொழினுட்ப உத்தியோகத்தர்
iv. சுற்றாடல் உத்தியோகத்தர்
v. சுகாதார மருத்துவ அதிகாரி அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட அலுவலர்

எவ்வாறெனினும் சேவையின் தேவை நிமித்தம் கமிட்டியின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கெனக் கமிட்டியின் உதவிக்காக சபையின் தவிசாளரால் பெயரிடப்படும் ஏனைய எவரேனும் உத்தியோகத்தரை அழைப்பதற்கென மேற்குறித்த ஏற்பாடுகள் தடையாக அமைதல் கூடாது.

21. இந்த துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்துக்கு அமைவாக அனுமதிப்பத்திரம் இல்லாது நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்தும்போது அல்லது குடிநீர் திட்டத்தைச் செயற்படுத்தும்போது 5 ஆவது நியமத்தை மீறும் வகையில் செயற்படுவது குற்றமாக அமைவதுடன், அது தொடர்பில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்துக்கு உட்படுதல் வேண்டும்.

22. இந்தத் துணைவிதிகள் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து நிருவாகப் பிரதேசத்துக்குள் செயற்பட்டு வரும் இந்தத் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பக்திரத்துக்கு அமைவாகக் குடிநீர் வழங்கல் திட்டம் தொடர்பில் இந்தத் துணை விதிகளின் நிபந்தனைகளுக்கு ஏற்ப எந்தவொரு நீர்வழங்கல் திட்டத்தைச் செயற்படுத்தும் ஆள் எவரும், அமையம் எதுவும் அல்லது இயக்கம் எதுவும் குறித்த கால எல்லையை வேண்டி நின்றால் 20 ஆவது நியமத்துக்கமைவான கமிட்டியின் பரிந்துரையைக் கவனத்தில் கொண்டு தவிசாளர் சலுகைக் காலம் ஒன்றை வழங்குவது சட்டபூர்வமாக அமையும். எனினும், இந்த விதியின் கீழ் வழங்கப்படும் சலுகைக் காலம் இந்தத் துணைவிதிகள் செயற்படும் திகதியிலிருந்து எழும் முதலாவது பஞ்சாங்க வருட காலத்தைத் தாண்டாத காலமாக இருத்தல் கூடாது.

23. இந்தத் துணைவிதிகளின் பதங்கள் தொடர்பில் கருத்து மயக்கம் ஏற்பட்டாலன்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ள,

"நகர சபை" என்பது நாவலபிட்டிய நகர சபையையும்,

"தவிசாளர்" என்பது உள்ளூராட்சித் அமையத் தேர்தல்கள் சட்டத்திற்கமைய நாவலபிட்டிய நகர சபைக்கு நியமிக்கப்படும் தவிசாளர் அல்லது தவிசாளரது பதவி செயற்படாதபோது தவிசாளரது பதவியின் கடமைகளை மேற்கொள்ளும் எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஆள் எவரையும்,

"கழிவுப்பொருட்கள்" என்பது இடைக்கிடை திருத்தம் செய்யப்பட்டுள்ள 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் கழிவுப் பொருட்கள் என்பதற்கு வழங்கப்பட்டுள்ள பொருளையும்,

"அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்" என்பது தவிசாளரால் பொதுவாகவோ அல்லது விசேடமாகவோ குறித்த கருமம் ஒன்றுக்கென எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட் டுள்ள அலுவலர் ஒருவரையும்,

"நீர் மூலாதாரம்" என்பது குடிநீர்த் தேவைக்கென மேற்றரை நீர் அல்லது தரைக்கீழ் நீர் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்காக இயற்கையாக அல்லது செயற்கையாக நீரைத் தேக்கிவைத்தல் அல்லது பொதுக் குடிநீர் பயன்பாட்டுக்கென ஏற்படுத்தப் பட்டுள்ள இடம் எனவும் கருதப்படும்.

**அட்டவணை - 01**

**நாவலபிட்டிய நகர சபை**

**குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்தவற்கான விண்ணப்பப்படிவம்**

01. விண்ணப்பதாரியின் பெயர் :
02. முகவரி :
03. விண்ணப்பதாரி ஒரு தொழிலாக இதனைச் செய்து வருவதாயின் பதிவிலக்கம் / விண்ணப்பதாரி ஒரு சங்கமாக இருப்பின் குறித்த சங்கத்தின் பதிவிலக்கம் :
04. நீர் மூலாதாரத்தின் அமைவிடம் பற்றிய தகவல்கள் :
   i. நீர் மூலாதாரத்தின் பெயர் :
   ii. அமைவிடம்: (அண்ணளவான வழித்தட வரைபடத்தினால் குறிப்பிடுக)
   iii. நீர் மூலாதாரத்தின் தன்மை :
   iv. கிராம அலுவலர் பிரிவு :
   v. நிலையத்தின் அமைவிட இலக்கம் :
   vi. நீர் மூலாதார அமைவிடத்தின் உரித்துரிமை/ஆளுகை :
   vii. நுழைவு (அண்ணளவான வழித்தட வரைபடத்தினால் குறிப்பிடுக)
   viii. நுகர்வின்ன தன்மை (தனிப்பட்ட /பொது) :

05. நீர்வழங்கல் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் ஊழியர் பற்றிய தகவல்கள் :

| தொ. இல. | பெயர் | முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

06. வர்த்தகத்துக்கெனப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் பற்றிய தகவல்கள் :

| தொ. இல. | வாகன எண் | வாகன வகை |
|---|---|---|
| | | |
| | | |

மேற்குறித்த 05 மற்றும் 06 தகவல்கள் வேறுபடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தவிசாளரை அறிவூட்டம் செய்தல் வேண்டும்.

07. உத்தேச நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட பயனாளிகளது எண்ணிக்கை :
08. நாளாந்தம் பயன்படுத்த உத்தேசித்துள்ள நீரின் கொள்ளளவு :

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் இணைப்புகளை முன்வைத்தல் வேண்டும் :

i. சங்கம் ஒன்றாயின் அதன் சட் ட விதிகளின் பிரதி மற்றும் சங்கத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதி

ii. நீர்வழங்கல் திட்டத்துக்குரிய கட் டமைப்பின் வழிமுறையை விளக்கும் வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழினுட்ப அலுவலர் ஒருவரால் சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்

iii. நீர்வழங்கல் திட்டத்துக்கான அனைத்து கட்டமைப்புகளையும் உள்ளடக்கிய திட்டம்

iv. நீர்வழங்கல் திட்டத்துக்கென ஈடுபடுத்தப்பட்டுள்ள பிரதம குழாய்த் தொகுதிகள் தனியாரது ஆதனங்களிடையே கொண்டு வரப்பட்டிருப்பின் அதற்கான அதிகாரத்தை வழங்கிய அனுமதி தொடர்பான ஆவணங்கள்

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :

(இந்த விண்ணப்பப்படிவத்துடன் வழிகாட்டல் பற்றிய ஆவணத்தின் பிரதி வழங்கப்படும்)

**அட்டவணை - 02**

நகர சபையின் நிருவாக எல்லைக்குள் நீர் மூலாதாரத்தைப் பயன்படுத்தி நீர்வழங்கல் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக வழங்கப்படும் சான்றிதழ்

1. அனுமதிப்பத்திரதாரியின் முழுப் பெயர் :
2. முகவரி:
3. தே.அ.அட்டை இலக்கம் :
4. அனுமதி வழங்கப்பட்டுள்ள நீர் மூலாதாரம் :
5. அனுமதி வழங்கப்படும் காலம் :

தவிசாளர்
அக்குறணை பிரதேச சபை

திகதி

EOG 01 - 213/ 3

**மத்திய மாகாண மாகாண சபை**

**துணை விதிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, குறித்த சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (ix) மற்றும் (xiii) ஆவது உப பிரிவுகளின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையினால் ஆக்கப்பட்ட குடிநீர் பாதுகாப்பு தொடர்பான துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட் டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது பந்தியின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மத்திய மாகாண சபையின் ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ. கமகே ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட் ட தினத்திலிருந்து பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் நிருவாகப் பிரிவுக்குள் செயற்படுத்தப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

சட்டத்தரணி லலித் யூ. கமகே,
மத்திய மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
மாளிகா சதுக்கம்,
கண்டி.
2023, சனவரி 05.

**பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின்**
**குடிநீர் மற்றும் நீரேந்து பிரதேசங்களின் பாதுகாப்பு தொடர்பான துணை விதிகள்**

01. பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாழும் மக்களது பொது சுகாதாரப் பாதுகாப்பை பேணும் பொருட்டு அதனோடு தொடர்புடைய நீர் மூலங்களை முறைப்படுத்துதல், கண்காணித்தல், அதிகார எல்லைக்குள் பேணப்பட்டு வரும் நீர் விநியோகக் கருத்திட்டங்களுக்கு உரிய நீர் மூலங்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உட்பட குடி நீர்ப் பாதுாப்பிற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்கு இடைநேர் விளைவான விடயங்களுக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காக இந்தத் துணை விதி விதிக்கப்படுகின்றது.

02. இந்தத் துணை விதியினைத் தயாரிப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (ix) மற்றும் 126 (xiii) ஆகிய உப பிரிவுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 122 (i) ஆம் உப பிரிவின் கீழ் பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

03. இந்தத் துணை விதி பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் குடிநீர் மற்றும் நீரேந்து பிரதேசங்களின் பாதுகாப் பு தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.

04. பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையினால் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பொதுமக்களின் நுகர்விற்காக குடிநீரினை வழங்கும் ஒவ்வொரு நீர் மூலத்திற்கும் உரிய வகையில் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள தகவல்கள் பேணி வரப்படுதல் வேண்டும்.

i. நீர் மூலத்தின் பெயர்
ii. அமைவிடம்
iii. கிராம அலுவலர் பிரிவு
iv. இடத்திற்குரிய அமைவிடத் தொகுதி இலக்கம்
v. நீர் மூலம் அமைந்துள்ள பிரதேசத்தின் உரிமை /அனுபவிக்கும் உரிமை
vi. பிரவேசம் (இயன்றளவு அண்ணளவான திட்ட வரைபடம் ஒன்றின் மூலம் அடையாளம் இடுதல் வேண்டும்)
vii. பயன்படுத்தும் தன்மை (தனியார் /பொது)

5. நீர் மூலம் நிலக்கீழ் நீர் மூலம் ஒன்றாக இருக்கும் போது அதன் 15 மீற்றர் ஆரையினைக் கொண்ட எல்லையினுள் எவரேனும் ஒரு நபரினால் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள ஏதேனும் நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ளல் கூடாது.

i. விலங்குகளை உள்ளே கொண்டு வருதல், பட்டிகளில் அடைத்து வைத்தல், கட்டி வைத்தல் அல்லது விலங்குகள் உட்பிரவேசிக்கும் வகையில் பேணி வருதல்.

ii. ஏதேனும் ஒரு கழிவுப் பொருளைப் போடுதல், புதைத்தல் அல்லது தேக்கி வைத்தல்.

iii. திறந்த வெளியில் தீ வைத்தலை மேற்கொள்ளல் அல்லது நீர் மூலத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஏதேனும் செயற்பாடு ஒன்றினை மேற்கொள்ளல்.

iv. அகழ்வுகளை மேற்கொள்ளல்.

v. ஏதேனும் கால்வாய் ஒன்றின் மூலம் கழிவு நீர் அனுப்பப்படும் வகையில் ஏதேனும் நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ளல் அல்லது நிர்மாணிக்கப்பட்டு உள்ள கால்வாய்கள் சேதமடைந்த நிலையில் பேணி வருவதற்கு இடமளித்தல்.

v. ஏதேனும் தூரப் பிரதேசம் ஒன்றில் இருந்து நீர் மூலத்திற்கு மேற்பரப்பு நீர் ஒரேயடியாக பாய்ந்து செல்வதற்கு வழிவகுத்தல்.

vi. நீர் மூலம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருக்கும் நிலையில் கிணற்றின் வாய்க்கட்டு முதல் 4.5 மீற்றருக்குக் குறைவான தூரத்தில் இருந்து நிலத்தின் மேற்பரப்பு நீர் கிணற்றின் உள்ளே கசிவதற்கு இடமளித்தல்.

vii. நீர் மூலம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருக்கும் நிலையில், நில மட்டம் முதல் 3 மீற்றர்களிலும் குறைவான ஆழம் ஒன்றில் இருந்து கிணற்றிற்கு நீர் கசியும் வகையில் பேணி வருதல்.

viii. நீர் மூலம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருக்கும் நிலையில், கிணற்றின் பாதுகாப்பிற்காக சீமேந்து மற்றும் இரும்பு என்பவற்றினைப் பயன்படுத்தி வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் மற்றும் கிணறுகளுக்கான கவசங்கள் இடப்பட்டு உள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அதற்காகப் பயன்படுத்தப்பட்டு உள்ள சீமேந்து நீரில் கலக்கும் வகையில் அல்லது இரும்பினை சார்ந்த வகையில் தோன்றும் துருப்பிடிப்புக்கள் நீரில் கரையும் வகையில் பேணி வரப்படும் வகையில் இருப்பதற்கு இடமளித்தல்.

ix. நீர் மூலம் ஆழமற்ற கிணறு ஒன்றாக இருக்கும் நிலையில், பிரதேச சபையின் தலைவர் அவர்கள் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அல்லது அவரினால் அது தொடர்பில் உரிய வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட ஒருவரினால் குறித்து உரைக்கப்படும் காலப் பகுதிக்குள் கிணற்று நீரினை முழுமையாக வெறிதாக்கி கிணற்றினை போதிய சுத்தத்துடன் பேணி வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்காமை.

6. இயற்கையான மேற்பரப்பு நீர் மூலம் ஒன்றாக இருக்கும் போது நீர்ப்பரப்பின் இரு பக்கங்களிலும் மற்றும் மேலே 30 மீற்றர்கள் மற்றும் கீழே 10 மீற்றர்கள் இனைக் கொண்ட எல்லைக்குள் எவரேனும் நபர் ஒருவரினால் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள ஏதேனும் நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ளல் கூடாது.

i. விலங்குகளை உள்ளே கொண்டு வருதல், பட்டிகளில் அடைத்து வைத்தல், சுட்டி வைத்தல் அல்லது விலங்குகள் உட்பிரவேசிக்கும் வகையில் பேணி வருதல்,

ii. வாகனங்களைக் கழுவுதல் வேறு ஏதேனும் இயந்திர உபகரணங்களைக் கழுவுதல்.

iii. குளிப்பதற்காகப் பயன்படுத்தல்.

iv. ஏதேனும் ஒரு கழிவுப் பொருளைப் போடுதல், புதைத்தல் அல்லது தேக்கி வைத்தல்.

v. திறந்த வெளியில் தீ வைத்தலை மேற்கொள்ளல் அல்லது நீர் மூலத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஏதேனும் செயற்பாடு ஒன்றினை மேற்கொள்ளல்.

vi. அகழ்வுகளை மேற்கொள்ளல்.

vii. ஏதேனும் கால்வாய் ஒன்றின் மூலம் கழிவு நீர் அனுப்பப்படும் வகையில் ஏதேனும் நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ளல்.

viii. வனச் செய்கை அல்லாத வேறு ஏதேனும் பயிர்ச்செய்கை நடவடிக்கை ஒன்றிற்காகப் பயன்படுத்தல்.

ix. எவரேனும் நபர் ஒருவரினால் நீர் மூலத்துடன் ஏதேனும் கழிவுப் பொருள் ஒன்று கலக்கக் கூடிய வகையில் நீரினை வெளியே எடுப்பதற்காக வாளி ஒன்றினையோ அல்லது வேறு ஏதேனும் சாதனம் ஒன்றினையோ பயன்படுத்தப்படுதல்.

7. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் பேணப்பட்டு வரும் நீர் வழங்கல் கருத்திட்டம் ஒன்று தொடர்பில் மற்றும் வீட்டுப் பாவனை ஒன்றிற்கான நீர் மூலம் ஒன்றினைப் பயன்படுத்தும் போது தவிர, நீர் மூலம் ஒன்றினைப் பயன்படுத்தி குடி நீர்க் கருத்திட்டம் ஒன்றினைப் பேணி வரும் ஒவ்வொரு நபரினாலும் அல்லது தாபனத்தினாலும் இந்த துணை விதியின் கீழ் இரண்டாவது அட்டவணைக்கு ஒத்தியங்கும் வகையிலான அனுமதிப்பத்திரம் ஒன்றினை பிரதேச சபையின் தலைவரிடம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

8. மேற்படி துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றிற்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும் இதன் துணை விதியின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரிக்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் கீழ் அதற்காக கோரிக்கை விடுத்தல் வேண்டும்.

9. மேற்படி துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றிற்காக கோரிக்கை விடுக்கப்படும் ஒவ்வொரு தபகும் இந்த துணை விதியின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து இருப்பின் அன்றி தலைவரினால் அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குதல் மேற்கொள்ளப்படுதல் கூடாது.

10.

10.1 நீரினை விநியோகித்தல் நீர்க் குழாய் ஒன்றினை மாத்திரம் பயன்படுத்தி நுகர்விற்காக நீரினைப் விநியோகிக்கும் சந்தர்ப்பம் ஒன்றில்

(1) விநியோகிக்கும் நீர் இலங்கைத் தர நிர்ணய நிறுவனத்தினால் வழங்கப்பட்டு உள்ள நியமங்களுக்கு கட்டுப்பட்டு உள்ளது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) கோரிக்கை விடுப்பவர் பொதுமக்கள் அமைப்பு ஒன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதேச சபையில் அல்லது சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

(3) நீர் விநியோக முன்மொழிவுத் திட்டத்திற்கு உரிய சகல கட்டமைப்புக்கள் உள்ளடங்கிய திட்டம் முன்வைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(4) நீர் விநியோக முன்மொழிவுத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் சகல கட்டமைப்புக்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அளவுகோல்களுக்கு ஒத்தியங்குதல் வேண்டும்.

(5) நீர் விநியோக முன்மொழிவுத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் பிரதான குழாய்க் கட்டமைப்பு தனியார் சொத்து ஒன்றின் மீது இடப்படும் போது அதற்கு உரிய உரித்தாளரிடமும், வேறு ஏதேனும் அதிகார சபை ஒன்றிற்கு உரித்தான சொத்து ஒன்றின் மீது இடப்படும் போது அதற்கு உரிய அதிகாரம் உடையவர்களிடமும் அதற்கு உரிய அனுமதியினைப் பெற்று இருப்பது தொடர்பில் உறுதிப்படுத்தல் ஒன்று முன் வைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(6) நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் ஊழியர்கள் தொடர்பில் விண்ணப்பத்தின் கீழ் கோரப்படும் தகவல்கள் மற்றும் ஊழியர்கள் மாற்றமுறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு உரிய தகவல்களை முன்வைத்தல் தொடர்பில் உறுதிப்படுத்தல் வேண்டும்.

10.2 நீரினைப் விநியோகிக்கும் பவுஸர் ஒன்றினை அல்லது கொள்கலன் ஒன்றினை அல்லத ஏதாவது ஒரு உபகரணத்தைப் பயன்படுத்தி நீரினை சேகரித்து வர்த்தக நோக்கம் ஒன்றிற்காக நீரினைப் பகிர்ந்தளிக்கும் சந்தர்ப்பம் ஒன்றில்,

(1) விநியோகிக்கும் நீர் இலங்கைத் தர நிர்ணய நிறுவனத்தினால் வழங்கப்பட்டு உள்ள நியமங்களுக்கு கட்டுப்பட்டு உள்ளது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) இந்தத் துணை விதிக்கு ஒத்தியங்கும் வகையில் பேணி வரப்படும் நீர் மூலம் ஒன்றின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் நீர் என்பது தொடர்பில் உறுதிப்படுத்தல் ஒன்றினை முன்வைத்து இருத்தல் வேண்டும்.

(3) பயன்படுத்தப்பட்டு வரும் நீர் மூலம் தொடர்பில் மற்றும் விநியோகிக்கப்படும் நீர் தொடர்பில் 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நீர் வளங்கள் சபைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டு உள்ள கட்டளைகளுக்கு அமைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளதாக மேற்படி சபையிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்றினை முன்வைத்து இருந்தல் வேண்டும்.

(4) பயன்பாட்டிற்காக வழங்கப்படும் நீர், நீர் வழங்கல் சபையினால் பரிந்துரை செய்யப்பட்ட ஏதேனும் ஒரு வழிமுறையின் கீழ் நீரினை சுத்தம் செய்து இருத்தல்.

(5) நீரினை விநியோகிப்பதற்காக ஏதேனும் வாகனம் ஒன்றினை, கொள்கலன் ஒன்றினை அல்லது வேறு ஏதாவது 93 உபகரணத்தைப் பயன்படுத்துவதாயின் அவ்வாறு பயன்படுத்தப்படும் பயன்பாடு தொடர்பான தகவல்கள் முன்வைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

11. இந்தத் தகவல்கள் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றிற்காக கோரிக்கை விடுக்கப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் அவ்வாறு விண்ணப்பம் கிடைக்கப்பெற்று ஒரு மாத காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் அல்லது அவ்வாறு வழங்க முடியவில்லை எனின் அதற்கான காரணங்களை விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் அறிவித்தல் தலைவரின் பணி ஆகும்.

12. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கான கட்டணங்கள் அடிப்படைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் பாத்ததேஹவாஹெட்ட பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் செல்லுபடியாகும்.

13. மேற்படி துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு நபரும் இங்கு கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நிபந்தனைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் செயற்படுதல் வேண்டும்.

i. விநியோகிக்கும் நீர் இலங்கைத் தர நிர்ணய நிறுவனத்தினால் வழங்கப்பட்டு உள்ள நியமங்களுக்கு ஒத்தியங்குதல் வேண்டும்.

ii. நீர் விநியோக முன்மொழிவுத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் சகல கட்டமைப்புக்களும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அளவுகோல்களுக்கு ஒத்தியங்குதல் வேண்டும்.

iii. அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் போது உறுதிப்படுத்தப்பட்ட நீர் மூலத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நீரினை, அனுமதிப்பத்திரத்திற்கு உரிய பணிகளுக்காகப் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுதல் வேண்டும்.

iv. நீரினை விநியோகிக்கும் போது அதற்காகப் பயன்படுத்தப்படும் கொள்கலன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் இலங்கைத் தர நிர்ணயப் பணியகத்தினால் வழங்கப்பட்டு உள்ள நியமங்களுக்கு ஒத்தியங்கும் வகையில் தயாரிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

v. பயன்படுத்தப்பட்டு வரும் நீர் மூலம் மற்றும் விநியோகிக்கும் நீர் என்பன 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நீர் வளங்கள் சபைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டு உள்ள கட்டளைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் பேணி வரப்படுதல் வெண்டும்.

vi. ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு ஊழியரும் தோல் நோய் ஒன்று அல்லது தொற்று நோய் ஒன்று பீடிக்கப்பட்டு உள்ள ஒருவராகவோ அல்லது அவ்வாறான ஒருவருடன் பழகிய ஒருவராகவோ இருத்தல் கூடாது.

vii. சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுகாதார ரீதியில் பாதுகாப்பான மற்றும் தூய்மையான நிலையில் ஆடைகளை அணிந்து இருத்தல் வேண்டும் என்பதுடன், உரிய முறையில் கையுறைகளை அணிந்து இருத்தல் வேண்டும்.

viii. அதிகார எல்லைக்குள் நோய்களைத் தடுத்தல் மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்திற்கு ஒத்தியங்கும் வகையில் கட்டளைகள் தடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் மேற்படி கட்டளைகளின் கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள நிபந்தனைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் சேவைகளைப் பேணி வருதல் வேண்டும்.

ix. நீர் விநியோகக் கருத்திட்டத்திற்கு உரிய வகையில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு ஊழியரும் அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்படும் தகவல்களில் பெயர் உள்ளடக்கப்பட்ட அல்லது அதன் பின்னர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாயின் அது தொடர்பான தகவல்களை பிரதேச சபையின் தலைவர் அவர்களிடம் முன்வைக்கப்படும் போது மேற்படி தகவல்களில் பெயர் உள்ளடக்கப்பட்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.

x. நீர் விநியோகக் கருத்திட்டத்தின் கீழ் பணி புரியும் ஊழியர்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆறுமாத காலத்திற்கு ஒரு முறை அல்லது சுகாதார மருத்துவ உத்தியோகத்தரினால் பரிந்துரை செய்யப்படும் கால எல்லைகளின் கீழ் ஊழியர்களை உரிய சேவையில் ஈடுபடுத்தல் பொருத்தமானது என்பதனை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

14. அதிகார எல்லைக்குள் உள்ள ஏதேனும் நீர் மூலம் ஒன்று தேசிய நீர் வழங்கல் சபை தவிர இந்தத் துணை விதியில் குறிப்பிடப்பட்டு உள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றின் கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் சந்தர்ப்பம் ஒன்றில் மேற்படி அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெற்றுள்ள நபர் தவிர வேறு எவரேனும் நபர் ஒருவரினால் மேற்படி நீர் மூலத்தைப் பயன்படுத்தல் அல்லது அதற்குத் தகாத நீர் இணைப்பு ஒன்றினைப் பேணி வருதல் மேற்கொள்ளப்படுதல் கூடாது.

15. அதிகார எல்லைக்குள் உள்ள ஏதேனும் நீர் மூலம் ஒன்று நேரிய நீர் வழங்கல் சபை தவிர இந்தத் துணை விதியில் குறிப்பிடப்பட்டு உள்ள நிபந்தனைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் பேணப்பட்டு வருகின்றதா என்பது தொடர்பில் பரீட்சிப்பதற்காக பொருத்தமானது மற்றும் நியாயமானது எனக் கருத முடியுமான வேளை ஒன்றில் தலைவர் அவர்கள் அல்லது தலைவரினால் உறுதியாக அதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட எவரேனும் சபையின் உத்தியோகத்தர் ஒருவர் நீர் மூலம் அமைந்துள்ள வளாகத்திற்குள் நுழைதல், மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளல் அல்லது துணை விதியின் பணிகளுக்காக தேவை எனக் கருதும் வேறு தகவல் ஒன்றினைக் கோருதல், சட்ட ரீதியானது ஆகும்.

16. மேற்படி துணை விதியின் கீழ் வழங்கப்பட்டு உள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றின் காலம் தலைவர் அவர்களினால் விஷேடமாக இரத்து செய்யப்படவில்லை ஆயின் வழங்கப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைதல் வேண்டும்.

17. இந்தத் துணை விதியில் குறிப்பிடப்பட்டு உள்ள நியதிகளுக்கு மாற்றமாக ஏதேனும் குடி நீர் மூலம் ஒன்றினைப் பயன்பாட்டிற்கு எடுக்கும் போது அல்லது குடி நீரினை விநியோகிக்கும் போது அது தொடர்பில் கண்டறியப்படும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அனுமதிப்பத்திரதாரருக்கு துணை விதிக்கு ஒத்தியங்குவதற்காக தலைவரினால் நியாயமான காலம் ஒன்று வழங்கப்பட்டு எழுத்து மூல அறிவித்தல் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் நியாயமான காலம் 14 நாட்களுக்கு மேற்படுதல் கூடாது.

18. மேற்படி பிரிவின் கீழ் வழங்கப்படும் காலப்பகுதியின் கீழ் துணை விதியுடன் ஒத்தியங்குவதற்கு எவரேனும் அனுமதிப்பத்திரதாரர் ஒருவர் தவறும் சந்தர்ப்பம் ஒன்றில் தலைவர் அவர்களினால் மேற்படி துணை விதியின் கீழ் வழங்கப்பட்டு உள்ள அனுமதிப்பத்திரம் பெற்ற நபருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

19. இந்தத் துணை விதியின் மேற்படி பிரிவின் கீழ் எவ்வகையில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் இந்தத் துணை விதியின் கீழான அனுமதிப்பத்திரம் ஒன்றிற்காக ஏற்புடையதாகும். ஏதேனும் நீர் விநியோகக் கருத்திட்டம் தொடர்பில் முதற் தடவையாக அனுமதிப்பத்திரம் ஒன்றிற்காக விண்ணப்பிக்கும் போது மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் கீழான நீர் விநியோகக் கருத்திட்டம் ஒன்றிற்கு உரிய வகையில் மாற்றங்களுடன் மீண்டும் அனுமதிப்பத்திரம் ஒன்றினைக் கோரும் சந்தர்ப்பம் ஒன்றில் இந்தத் துணை விதியின் கீழ் தலைவர் அவர்களிடம் அதற்கு உரிய பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமனம் செய்யப்படும் குழு ஒன்றின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு இருந்தால் அன்றி தலைவர் அவர்களினால் அதற்கு உரிய அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் மேற்கொள்ளப்படுதல் கூடாது.

20. இந்தத் துணை விதியின் 19 ஆம் பிரிவின் பணிக்காக மற்றும் அதிகார எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் நீர் விநியோகக் கருத்திட்டம் தொடர்பில் குடி நீர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக சபையிடம் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ளவர்களை உள்ளடக்கும் வகையிலான குழு ஒன்று இருந்தல் வேண்டும்.

i. தலைவர்
ii. செயலாளர்
iii. தொழிநுட்ப உத்தியோகத்தர்
iv. சுற்றாடல் உத்தியோகத்தர்
iv. சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் கத்தந்துவை உத்தியோகத்தர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர் ஒருவர்

எவ்வாறெனினும் நிறைவேற்றுவதற்காக கசவையின் தேவைப்பாட்டிற்கு அமைய குழுவின் நோக்கத்தினை குழுவின் ஒத்துழைப்பிற்காக சபையின் தலைவர் அவர்களினால் பெயர் குறிப்பிடப்படும் வேறு எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரை அழைப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தடை ஒன்றாக இருந்தல் கூடாது. மேலே

21. இந்தத் துணை விதியில் குறிப்பிடப்பட்டு உள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றிற்குக் கட்டுப்பட்ட வகையில், அனுமதிப்பத்திரம் ஒன்றின்றி நீர் மூலம் ஒன்றைப் பயன்படுத்தும் போது அல்லது குடி நீர் விநியோகக் கருத்திட்டம் ஒன்றினைப் பேணி வரும் போது 5 ஆம் பிரிவினை மீறும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் குற்றம் ஒன்றாகும் என்பதுடன், மேற்படி குற்றம் தொடர்பில் நீதவான் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்படுவதன் பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள தண்டனை ஒன்றிற்கு உட்படுதல் வேண்டும்.

22. இந்தத் துணை விதி நடைமுறைப்படுத்தப்படும் திகதி ஆகும் போது அதிகால எல்லைக்குள் நடைமுறையில் உள்ள மேற்படி துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கு உட்படும் குடி நீர் விநியோகக் கருத்திட்டம் ஒன்று தொடர்பில் இந்தத் துணை விதியில் குறிப்பிடப்பட்டு உள்ள நிபந்தனைகளுக்கு ஒத்தியங்குவதற்காக ஏதேனும் நீர் விநியோகக் கருத்திட்டம் ஒன்றினைப் பேணி வரும் நபர் ஒருவரினால், தாபனம் ஒன்றினால் அல்லது அமைப்பு ஒன்றினால் ஏதேனும் காலப் பகுதி ஒன்றினைக் கோரி இருப்பின் 20 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டு உள்ள குழுவின் பரிந்துரையினைக் கருத்திக் கொண்டு தலைவர் அவர்களினால் சலுகைக் காலம் ஒன்றினை வழங்குதல் சட்ட ரீதியானது ஆகும். அவ்வாறெனினும் மேற்படி பிரிவின் கீழ் வழங்கப்படும் சலுகைக் காலம் மேற்படி துணை விதி நடைமுறைப்படுத்தப்படும் திகதியுடன் முதலில் வரும் பஞ்சாங்க வருடத்தின் காலத்தை மிகைக்கும் காலம் ஒன்றாக இருத்தல் கூடாது.

23. இந்தத் துணை விதியின் சொற்கள் தொடர்பில் வேறு ஒரு அர்த்தம் தேவைப்பட்டால் அன்றி, இந்தத் துணை விதி:

பிரதேச சபை என்பதன் மூலம் பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையினையும்,

தலைவர் என்பதன் மூலம் உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் தேர்தல் சட்டத்திற்கு அமைய பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபைக்காக நியமனம் செய்யப்படும் தலைவர் அல்லது தலைவர் பதவி நடைமுறையில் இல்லாத சந்தர்ப்பம் ஒன்றில் தலைவர் அவர்களின் பதவிக்குரிய பணிகளையும் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்காக எழுத்து மூல சட்டத்திற்கு ஒத்தியங்கும் வகையில் நியமனம் செய்யப்படும் ஒருவரையும்,

கழிவுப் பொருள் என்பதன் மூலம் அவ்வப்போது திருந்தம் செய்யப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் கழிவுப் பொருட்கள் என்பதற்காக வழங்கப்பட்டு உள்ள பொருளையும்,

அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர் என்பதன் மூலம் தலைவர் அவர்களினால் பொதுவாக மற்றும் விஷேடமாக குறித்த பணிகளுக்காக எழுத்து மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு உள்ள உத்தியோகத்தர் ஒருவரையும்,

நீர் மூலம் ஒன்று என்பதன் மூலம் குடி தீர் தேவைப்பாடு ஒன்றிற்காக புவி மேற்பரப்பு நீர் அல்லது நிலக் கீழ் நீரினைப் பயன்படுத்துவதற்குக் காரணமாக அமையும் இயற்கையாக அல்லது செயற்கையாக நடைபெறும் நீர் சேரும் அல்லது பொதுக் குடி நீர் பயன்பாடு ஒன்றிற்கான நோற்றுவாய் ஒன்றுள்ள இடம் ஒன்றினையும்,

**அட்டவணை இலக்கம் 1**

**குடி நீரினைப் பெற்றுக் கொள்வதற்காக நீர் மூலங்களைப் பயன்படுத்துவதற்குரிய அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரியின் பெயர் :

2. முகவரி :

3. விண்ணப்பதாரி வியாபாரம் ஒன்றாகப் பேணி வருவதாயின் பதிவு இலக்கம் / விண்ணப்பதாரி சங்கம் ஒன்றாயின் உரிய சங்கத்தின் பதிவு இலக்கம்

4. நீர் மூலம் அமைந்துள்ள இடம் தொடர்பான கீழே குறிப்பிடப்பட்டு உள்ள தகவல்கள்
   i. நீர் மூலத்தின் பெயர்
   ii. அமைவிடம் (அண்ணளவான திட்ட வரைபடம் ஒன்றிளால் அடையாளம் இடுதல் வேண்டும்)

iii. நீர் மூலத்தின் தன்மை
iv. கிராம அலுவலர் பிரிவு
v. இடம் அமைந்துள்ள தொகுதி இலக்கம்
vi. நீர் மூலம் அமைந்துள்ள பிரதேசத்தின் உரிமை /அனுபவிக்கும் உரிமை
vii. பிரவேசம் (இயன்றளவு அண்ணளவான திட்ட வரைபடம் ஒன்றினால் அடையாளம் இடுதல் வேண்டும்)
viii. பயன்படுத்தும் தன்மை (தனியார் /பொது)

5. நீர் விநியோகக் கருத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஊழியர்கள் தொடர்பான தகவல்கள்

| தொ. இல. | பெயர் | முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

6. வியாபாரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தொடர்பான தகவல்கள்

| தொ. இல. | வாகன எண் | வாகன வகை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

மேற்படி இலக்கம் 05 மற்றும் 06 இல் குறிப்பிடப்பட்டு உள்ள தகவல்கள் மாற்றமடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தலைவர் அவர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

7. முன்மொழியப்பட்டு உள்ள நீர் விநியோகக் கருத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை

8. நாளாந்தம் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் நீரின் கொள்ளளவு

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள இணைப்புக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

i. சங்கம் ஒன்றாயின் யாப்பின் பிரதி ஒன்று மற்றும் சங்கத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்று.
ii. நீர் விநியோகக் கருத்திட்டத்திற்கு உரிய கட்டமைப்புக்கள் பயன்படுத்தப்பட்டு உள்ள விதம் தெளிவுபடுத்தப்படும் வகையில் ஏற்றுக்கொள்ளக் கூடிய தொழிநுட்ப உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்ட அண்ணவளவான திட்ட வரைப்படம்.
iii. நீர் வழங்கல் முன்மொழிவுத் திட்டத்திற்கு உரிய வகையில் சகல கட்டமைப்புக்களும் உள்ளடக்கப்பட்ட திட்டம்.
iv. நீர் வழங்கல் முன்மொழிவுத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் பிரதான குழாய்க் கட்டமைப்பு தனியார் சொத்து ஒன்றின் மீது இடப்படும் போது அதற்கு உரிய அதிகாரம் உடையவர்களினால் அதற்கு உரிய அனுமதி வழங்கப்பட்டு உள்ள ஆவணங்கள்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி

(இந்த விண்ணப்பப்படிவத்துடன் உரிய வழிகாட்டல்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணத்தின் பிரதி ஒன்று வழங்கப்படும்.)

**அட்டவணை இலக்கம் 2**

பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நீர் மூலம் ஒன்றினைப் பயன்படுத்தி குடி நீர் விநியோகக் கருத்திட்டம் ஒன்றினைப் பேணி வருவதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஆகும்.

1. அனுமதிப்பத்திரதாரரின் முழுப் பெயர் :

2. முகவரி :

3. தே. அ. அ. இலக்கம்

4. அனுமதி வழங்கப்பட்ட நீர் மூலம் :

5. அனுமதி வழங்கப்பட்ட காலம் :

......................................................................

திகதி

தலைவர் பிரதேச சபை

EOG 01 - 213/ 4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.